வாரப்பதிப்பு விலை சதம் 15

# சுதந்திரன்
SUTANTIRAN

194A, SILVERSMITH STREET, COLOMBO-12.

தாமரைப்பூ மார்க்
கண்களுக்கு பிரகாசமும் மூளைக்குக் குளிர்ச்சியையும் தருவது நறுமணமுடையது எங்கும் கிடைக்கும்.
சந்தனத்தைலம்
முழு இலங்கைக்கும் சோல் ஏஜண்ட்ஸ்:- M. ஹைதரலி & பிரதர்ஸ். 22. 2/7 ஆதமலி பில்டிங், கொழும்பு 11

புத்தகம் 6 நந்தன ஸ்ரீ ஆவணிமீ 16உ [31-8-52] ஞாயிற்றுக்கிழமை ஜுல்காயிதாபிறை 9 இதழ் 13

# கல்லோயாக் கலவரங்கள் தமிழரசின் அவசியத்தைவற்புறுத்துகின்றன

## கால் வைக்குமுன்பே கத்திவெட்டு குடியேறிவிட்டால் கொலைக்களந்தான

## இந்து முஸ்லீம் கிறிஸ்தவர்கள் சிந்துபாடி வாழ்ந்த நாட்டில் இன்று அக்கினியும் அழுகுரலும்

கல்லோயாவிலும், அதை அடுத்துள்ள அம்பாறை, இக்கினியாக்கலை, சடையன் தளாவை, சவளக்கடை ஆகிய பகுதிகளிலும் வந்தேறு குடிகளான சிங்களவருக்கும், நிரந்தர வாசிகளான முஸ்லிம்களுக்கும் பலத்த கை கலப்பு நடைபெறுவதாகத் தெரியவருகிறது. இன வெறியை கிளப்பிவிடக்கூடிய அளவு இப்பகுதியிலுள்ள சிங்களவர்கள் சிலர் நடந்து கொள்வதாகச் சொல்லப்படுகிறது. தலைமுறை தலைமுறையாக பல நூற்றூண்டுக்காலம் தமிழரும் முஸ்லிம்களும் இரண்டறக்கலந்து அண்ணன் தம்பிகள் போல் வாழ்ந்த பகுதியில் இன்று மூன்றுவது பேர் வழிகள் நுழைந்ததின் பேரில் மூண்டுள்ள இரத்தக்களரி இலங்கையில் மொழியை அடிப்படையாகக்கொண்ட மொழிவாரி மாகாணம் (தமிழரசு) ஏற்படவேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதாயிருக்கிறது.

### கால் வைக்குமுன்

அரசாங்கத்தின் திட்டப்படி குடியேறுமுன் இப்பகுதி மக்களுக்கு இவ்வளவு இன்னலும், இடைஞ்சலும், இரத்தம் சிந்த வேண்டிய நிலைமையுமென்றால் குடியேறிய பின் அதுவும் 15,000 குடும்பங்கள் வந்து சேர்ந்தபின் எப்படி இருக்குமென்பதை நினைக்கும்போது மூச்சோட்டமே நின்றுவிடும்போல் இருக்கிறது.

### நாலாவது தடவை

இப் பகுதியில் சிங்களவருக்கும், முஸ்லிம்களுக்குமிடையே நடைபெறும் இக் கைகலப்பு நாலாவது தடவை ஏற்பட்டதென்று தெரியவருகிறது. சாதாரண முஸ்லிம் வியாபாரி ஒருவருக்கு நேர்ந்த மரணத்தை ஒட்டியே இந்த கலவரம் மூண்டிருப்பதாகசொல்லப்படுகிறது. வயிற்றுப் பிழைப்புக்காக வயல்களிலும், சேனைகளிலும் வேலை செய்யும் முஸ்லிம் மக்கள் அநியாயமாகவும் அக்கிரமமாகவும் தாக்கப்படுகிறார்கள். நிலைமை நாளுக்கு நாள் முற்றிக்கொண்டுவருவதாகவும், சமரசம் ஏற்படக்கூடிய அறிகுறிகள் காணப்படவில்லையென்றும் தெரிகிறது.

### கொள்ளை, கொலை

வியாபாரிகளுடைய கடைகளைக் கொள்ளையடித்தும், தீ மூட்டியும், தங்களுடைய ஆத்திரத்தை தீர்த்துக் கொள்வதாகச் சொல்லப்படுகிறது. மாட்டு வண்டிகள் நெருப்பு மூட்டப்பட்டதாகவும், மாடுகளின் கால்கள் வெட்டப்பட்டதாகவும், மண்டைகள் உடைக்கப்பட்டதாகவும் செய்திகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன

### குடும்பங்கள் வெளியேற்றம்

இந்த தாக்குதல்களைத் தாங்கமாட்டாது சாமான்களை எல்லாம் போட்டுவிட்டு அப்பகுதியிலிருந்த ஏராளமான குடும்பங்கள் நாளும் பொழுதும் வெளியேறிக் கொண்டிருக்கின்றன. பயமும், பீதியும் இப்பகுதி மக்களிடையே வெகுவாகப் பதிந்திருக்கின்றது.

### போலிஸார் பிரவேசம்

நிலைமையைச் சமாளிக்க வந்த போலிஸார் குற்றவாளிகள் யார் நிரபராதிகள் யார் என்று தெரிந்து கொள்ளமுடியாது சந்தித்தவர்களையெல்லாம் கைது செய்கிறார்களாம். போலிஸார் பிரயாணம் செய்யும் மோட்டார் வண்டிகள் பாதையில் மரக்கட்டை போட்டு மறிக்கப்பட்டு அவற்றின் மேல் கற்கள் வீசப்படுகின்றன. இது காரணமாகப் போலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டியேற்பட்டது.

### எம். பிக்கள்மீது ஆத்திரம்

அநியாயமாகத் தாக்கப்படும் அப்பாவி மக்களின் அபயக்குரல் கேட்காமல் இப் பகுதி பிரதிநிதிகள் சிலர் ஹிதோபதேசம் செய்ய முற்பட்டிருக்கிறார்கள். "கல்லோயாவில் தேனும் பாலும் ஓடும்" என்று சொன்னீர்களே "இன்று தீயும், இரத்தமும் பரவுகிறதே" என்று கேட்கும் அளவுக்கு மக்கள் துடிக்கிறார்கள். அரசாங்கத்திற்கு பாத பூஜைபோட்டு பிரதமரை வானளாவப் புகழ்ந்து, யு. என். பி. ஆட்சியை வாய்கிழிய வர்ணித்து ஒரு அற்ப அரை மந்திரி பதவிக்கு தங்கள் இனத்தை விற்க டெமிள் ட்ரீஸ் மாளிகை முன் கியூ வரிசையில் நிற்கும் இப் பகுதி பிரதிநிதிகளில் சிலர் தம் சகோதரர்களுக்கு இந்நிலை ஏற்பட்டிருப்பதைக் கண்டும் யு. என். பிக்காக வக்காலத்து வாங்குகிறார்கள். "கல்லோயாக் குடியேற்றம் பற்றி கிழக்கு மாகாண மக்கள் பீதிகொள்ள வேண்டியதில்லை" என்று உபதேசம் செய்ய புதிய பிரதிநிதியான திரு. இராச மாணிக்கம் கிளம்பியிருக்கிறார்.

### புகையிரதத்தில் பயமுறுத்தல்

இக் குழப்பத்தை யொட்டி சில சிங்களக் காடையர்கள் புகையிரதத்தில் பிரயாணம் செய்யும் முஸ்லிம்களை பயமுறுத்துவதாகவும், அவர்களிடமுள்ள பணத்தைப் பிடுங்குவதாகவும் தெரியவருகிறது.

# தோட்ட தொழிலாளர் சம்பளம் குறைக்கப்படுமா?

தேயிலை, ரப்பர் விலை வீழ்ச்சியடைந்து வருவதை உத்தேசித்து தேயிலை ரப்பர் தோட்டத் தொழிலாளரின் அடிப்படைச் சம்பளங்களைக் குறைக்க வேண்டுமென தோட்ட முதலாளிமார்கள் சம்பள நிர்ணய சபையிடம் விஞ்ஞாபித்திருக்கிறார்கள்.

தற்போது அமுலிலிருக்கும் தேயிலை ரப்பர் தோட்டத் தொழிலாளரின் அடிப்படைச் சம்பளம் பின்வருமாறு குறைக்க வேண்டுமென யோசனை கூறியிருக்கிறார்கள்:-

தேயிலை: ஆண் 1-30லிருந்து 87 சதமாகவும் பெண் ரூ 1-20லிருந்து 68 சதமாகவும் குழந்தைகள் 95 சதத்திலிருந்து 58 சதமாகவும்

ரப்பர்: ஆண் ரூ 1-10லிருந்து 75 சதமாகவும் பெண் 95 சதத்திலிருந்து 60 சதமாகவும் குழந்தைகள் 65 சதத்திலிருந்து 50 சதமாகவும்

தொழிலாளரின் சம்பளங்களைக் குறைக்காவிடில் தொழிலாளர்களில் பலரை வேலையினின்று நீக்கிவிட வேண்டியிருக்குமென்றும் சில தோட்டங்களை மூடிவிட நேரிடுமென்றும் முதலாளிகள் பயமுறுத்துகின்றனராம்.

சம்பள குறைப்பு யோசனையை இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் இதர யூனியன்களும் கடுமையாக எதிர்ப்பார்கள் என்று தெரிய வருகிறது.

### அரசியல் சோதிடம்!

(சேர் ஜோன் கொத்தலாவலையை ஆதரிக்கும் 'இலங்கய' என்ற சிங்கள மாதாந்தர சஞ்சிகையின் 1952, ஜூலை மாத இதழில் கீழ்க்கண்ட செய்தி வெளியாகியிருக்கிறது)

"ஒரு பிரபல சோதிட கணித சாஸ்திரவிற்பன்னர் கூறுவதாவது: ஆகஸ்டு 5உ முதல் 3 மாத காலத்திற்குள் இலங்கை அரசியல் தலைவர்களில் பிரபலமான சிலர் திடீரென வீழ்ச்சியடைவார்கள். இலங்கையில் இதற்கு முன்பு நடைபெறாத ஒரு அரசியல் மாறுதல் ஏற்படும் கள்ளக் குடியேற்றமும் உணவுப் பிரச்னையும் கடுமையாகி ஆட்சியாளர் நெருக்கடிக்குள்ளாவார்கள் இச்சந்தர்ப்பத்தில் ஒரு புதிய அரசியல் கட்சி நிறுவப்படும் அதற்கு மக்களின் ஆதரவு அமோகமாகக் கிடைக்கும் கனவில் கூட நினைக்காத சரித்திர முக்கியத்துவம் பெறும் ஒரு சம்பவம் நிச்சயமாக நிகழும் இக்கணித மேதாவியின் பெயர் பின்னர் வெளியிடப்படும்"

### சேர் ஐவர் ஜெனிங்ஸ் ராஜீநாமா?

இலங்கை பல்கலைக் கழகத் துணை வேந்தர் சேர் ஐவர் ஜென்னிங்ஸ் பிரதம மந்திரிக்கு தனது ராஜினாமாவைச் சமர்ப்பித்திருக்கிறாரென்று ஊர்ஜிதமாகாத செய்தியொன்று கூறுகிறது.

இவ் விஷயம் மந்திரி சபையில் விவாதிக்கப்படும் வரை ராஜினாமாவைத் தம்மால் அங்கீகரிக்க முடியாதென்று பிரதமர் சேர் ஐவருக்கு தெரிவித்திருக்கிறாராம்.

# மண்டூர்ப்பகுதியில் குடியேற கண்டி, கேகாலை, கொழும்புச் சிங்களவர்

## அக்டோபர் மாதத்தில் வந்து சேருவார்கள்

கல்லோயா பள்ளத்தாக்கைச் சேர்ந்த மண்டூர்ப் பகுதியில் குடியேற ஆட்களைத் தெரிந்தெடுப்பதற்காக காணிக் கச்சேரிகள் கூட்டுமாறு கல்லோயா அபிவிருத்தி சபைத் தலைவர் கண்டி, கேகாலை, நூரளை, கொழும்பு அரசாங்க ஏசண்டர்களைக் கேட்டுள்ளார்.

தெரிவு செய்யப்படுவோர் அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் எதிர் வரும் பெரும்போக விளைச்சலுக்கு தயாராக வந்து சேர வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

மேறகண்ட கண்டி, கேகாலை, நூரளை, கொழும்பு ஆகிய நாலு பகுதிகளிலுமிருந்து 750 பேரும், கல்லோயா அதிகாரப் பிரிவில் 750 பேரும் குடியேறத் தெரிவு செய்யப்படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

வரிஒன்றுக்கு 50 சதம் 6 வரிகளுக்கும் அதற்குக் குறைந்ததற்கும் ரூபாய் 3-00.

### அறிவித்தல்

எங்கள் கடையிலிருந்த எம் செய்யது அஹ்மது விலகிவிட்டதைவாடிக்கைகாரர்களுக்குத் தெரிவிக்கின்றோம். ஹாஜி ஸ்டோர் யோகம, டெலிபோன் 801.

### தேவை

வின்ஸ்லோ பாதிரியாரின் தமிழ் ஆங்கில அகராதி தேவை.
எஸ். ஆர். 196, தட்டாதெரு கொழும்பு.

டபிள்டிமைசைஸ் பத்திரிகை அடிக்கக்கூடிய செஸ் உடனடியாக தேவை. விண்ணப்பிக்க.
மானேஜர், சுதந்திரன் 194, ஏ தட்டாதெரு. கொழும்பு-12.


### போக்குவரத்து கஷ்டம்

நெடுந்தீவுக்குப் ஊர்காவற்றுறைக்குமிடையே கிழமை நாட்களில் போக்குவரத்து செய்துவந்த "சில்வர் ஸ்பிறே" என்னும் மோட்டார் புகை வள்ளம் பழுதடைந்து விட்டபடியால் தற்போது "ஸாவ்விகார்" என்னும் புகைவள்ளம் போக்குவரத்து செய்கிறது இப்புகை வள்ளம் காற்றுக்காலத்திலும் கடல் கொந்தளிப்புக்காலத்திலும் போக்குவரத்து செய்ய முடியாது.

### பறக்கும் தட்டுகளில் குள்ளர்கள் பிரயாணம்

**போசிரியரின் ரஸமான தகவல்**

"பறக்கும் தட்டுகள் உண்மையாகவே இருக்கின்றன அவைகளில் காணப்படும் சிறிய மனிதர்கள் (இவர்களை ரஷ்யர்களும் அமெரிக்கர்களும் பார்த்திருக்கின்றனராம்) செவ்வாய்கிரஹத்தின் மக்கள்' என்று பிரிட்டனின் சர்வதேச மறுபிறவிப் பேராசிரியர் மிஸ் கிளாராகாட் கூறுகிருர்

மிஸ் காட் கூறுவதாவது:- 'செவ்வாய்கிரஹத்தில சுமார் 1,00,000 பேர்கள் வசிக்கின்றன இம்மக்களுக்கு மூசசுப்பை (இவர்கள் வடிவில் குட்டையா இருந்த போதிலும்) பூமியில் இருப்பவர்களின் மூச்சுப்பைகளைக் காட்டிலும பெரியது. இதனுல்தான் இங்கு உள்ள அற்ப காற்றை உட்கொண்டு வசிக்கின்றனர் நம்மைக் காட்டிலும் செவ்வாய் கிரஹத்தின் மககள் எல்லா துறைகளிலும் முன்னேற்றமடைந்திருக்கின்றனர்

செவ்வாயில் மதப்போராட்டம் ஒன்றும் கிடையாதென்றும், எலலா குழந்தைகளும் ஒரே பள்ளிக்குத்தான் செலகின்றனர் என்றும், புதன, சுக்கிரன் முதலிய கிரஹங்களிலும் மனிதர்கள் வசிக்கின்றனர் என்று இவர் மேலும் கூறினார்.

★ ப சுந்தரலிங்கம், பதுளை.
கே: வாளைவிடப் பேனா பயங்கரமானது என்கிருர்களே. அது உண்மையா?
ப: முற்றும உண்மை. அதுவும் அந்தப் பேனா பவுண்டன் பேனவாக இருந்து எமது மடியில உட்கார்ந்திருக்கும் இரண்டு வயதுப் பையனின் கையில் அது சிக்கிவிட்டால், ரொம்பப் பயப்படுவேன். என்னுடைய வெள்ளை வேஷ்டி தப்பிப் பிழைக்க வேண்டுமே!

ஃ

வி. கணேசரத்தினம், அளவெட்டி
கே: ஒரு பெண்ணின் அழகு எப்படிப்பட்டது?
ப: சுற்றியுள்ள ஆண்களின் கண்களுக்கு விருந்தாகவும் பெண்களின் கண்களுக்கு மிளகாய்ப் பொடியாகவும் விளங்குவது.

ஃ

பி. ஏ. ஹமீது, சீனன்வாடி
கே: நீங்கள் எப்போதாவது கோயிலுக்குப் போனதுண்டா?
ப: உண்டு; கடவுள் கோயில்களில் வாசம் செய்த காலத்தில் ஆனல் இப்போது இல்லை.

ஃ

சி. நாகமுத்து. கோண்டாவில் வடக்கு
கே: எல்லாத் தொழிலையும்பற்றி பாராளுமன்றத்தில் பேசி விருத்தி செய்கிருர்கள். ஆனல் சுருட்டுத் தொழிலை பற்றி மட்டும் பேசாத மர்மம் என்ன?
ப; சம்பந்தப்பட்ட மந்திரியார் பேசுவதெல்லாம் புனை சுருட்டுக்களாய் இருப்பதால் தனிச் சுருட்டைப் பற்றிப் பேச அவசியம் இல்லை என்று கருதுகிருர் போலும்
கே: சிமெந்து தொழிற்சாலையில் சேர நான் விரும்புகிறேன். எப்போ சேரலாம்?
ப: அடடா, கடந்த தேர்தல் சமயத்தைத் தவறவிட்டுவிட்டீரே!

ஃ

எம் ஏ. சமது, மூதூர்
கே: உண்மையன்பில் ஆழ்ந்து, உண்மை நண்பராய் ஒரு யுவனும் ஒரு யுவதியும பழகினல் அவ்வன்பு காதலிலதான முடியுமா?
ப: பூமலர் எலலாம புனிதனின பாதங்களையே அலங்கரிப்பதில்லை. சில புழுக்கடையிலும் வீசப்படுவதுண்டு. அதுபோல் அன்பு எனும மலர் காதலில் மலர்ந்துவிட்டால் சாதலில் குவியக் கூடும்

ஃ

எஸ். பி. குணம், தெனவத்தை
கே: பெண்களின் மனஎண்ணத்தை எதற்கு ஒப்பிடலாம்?
ப: சலனப் படத்திற்கு.

ஃ

எஸ். எம். இஸ்மாயில், மொரட்டுவ
கே: குயுக்தி என்ற பதம் ஆங்கிலமா தமிழா?
ப: வடமொழியை அடிப்படையாகக் கொண்ட தமிழ்ப் பதம்.

ஃ

கே: பொன்னுச்சாமி, மட்டுவில் வடக்கு
கே: பெண்களின் முகத்தில் ஏன் தாடிமீசை அரும்புவதில்லை?
ப: பெண்களின் முகம்

## கேட்டுப்பாருங்கள்

குயுக்தி

சுகந்தத்தை முகர விரும்புபவர்களுக்கு முட்களின் இடையூறு இருக்கக் கூடாது என்பது இயற்கையின் நியதி.

ஃ

எம். சரீப்தின், திரிகோணமலை
கே: உமது உயிர், உத்தியோகம் இவற்றில் எதை நீர் மேலாக மதிக்கிறீர்?
ப: நிச்சயமாக உத்தியோகத்தைத்தான். உயிர்போனல் உத்தியோகம் தேவைப்படாது. ஆனல் உத்தியோகம் போனல் உயிர்வாழ முடியாதே.

ஃ

### பரிசு ரூ. 3-00

யாரும் கேள்விகள் அனுப்பலாம். ஆனல் கேள்விகள் போஸ்கார்ட்டில் மட்டுமே எழுதப் படவேண்டும். தகுந்த கேள்விகளுக்கு நிச்சயம் பதில் கிடைக்கும். ஒவ்வொரு வாரமும் கருத்தும் ஹாஸ்யமுமான பதில் கிடைக்ககூடிய சிறந்தகேள்வியை அனுப்புடவர்களுக்கு ரூ 3-00 பரிசு வழுங்கப்படும்.

சி. சிங்கராசா, மட்டக்களப்பு
கே: ஆஸ்திகம் வளர்வதற்கு எது அவசியம்?
ப: பயபக்தி அவசியம்.

ஃ

ஆர். கே. சீனு, ஈச்சந்தீவு
கே: தானங்கள் எல்லாவற்றிலும்மேலானது எது?
ப: நிதானம்.

ஃ

எஸ். சே. இ, இலுப்படிச்சேனை
கே: கோவிலைக் கண்டவுடன் தலையில் குட்டுவதற்கு காரணம் என்ன?
ப: ஐயோ! மரமண்டையே, இதுவரை நீ கடவுளை நினைத்தாயா என்று தலைக்கு கொடுக்குப் தண்டனையாயிருக்கலாம்.

ஃ

பொன்வண்டு, மட்டக்கொல்லை
கே: வறுமையால் வாடும் நண்பரொருவர் வருடமொரு குழந்தைக்குத் தகப்பன் ஆகருர். காரணம் கேட்டால "கடவுள் கொடுக்கருர்" என்கிருர். இது சரியா?
ப: உம்நண்பருக்கு தாராளமாக பிள்ளை வினியோகம் செய்யும் அந்தக கடவுள் கொஞ்சம் பணமும் சேர்த்து சப்ளை செய்ய முடியாமல் கஞ்சத்தனம் பண்ணுவதேன்?

ஃ

ல. பற்குணன், கொழும்பு
கே: பாராளுமன்றத்தில் திரு சுந்தரலிங்கமும் திரு வன்னியசிங்கமும் தலை நிமிர்ந்து சிங்க கர்ஜனை செய்யும்போது மந்திரி நடேசன் மட்டும் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டிருப்பதேன்?
ப: அவருக்குத் தலை நிமிர முடியாமல் தலையில் தலைப்பாகையிருப்பது காரணமாய் இருக்கலாம்.

க. சுரேந்திரன், யாழ்ப்பாணம்
கே: காதலுக்கு விரோதி எது?
ப: முன்பெல்லாம் கலியாணம் மட்டும் காதலுக்கு விரோதியாய் இருந்த வந்தது இப்போது அஸிட் என்ற அக்கினித் திராவகமும் ஒரு புதிய விரோதியாக முளைத்திருக்கிறது

ஃ

பா. முத்துராஜா, கலஹா
கே: ஜனப்பிரதிநிதிகள் சபையில் திரு குமாரசாமி இலங்கை மக்களை பட்டினி கிடக்க விடமாட்டோ பென கூறினரே இது நடக்குமா?
ப: பட்டினி கிடவாமலே பரகதியடையச செய்துவிடுவார் போலும்

ஃ

சி. சோமசுந்தரம், ஏருவூர்.
கே: சினிமா நட்சத்திரங்கள் ஏன் அழகு ராணிப் போட்டியில் பங்குபற்றுவதில்லை?
ப: மூலாம் பூசிக்கொண்டு கமிராவின் கண்ணை ஏமாற்றலாமே தவிர நிஜக் கண்களை ஏமாற்றமுடியாதென்ற இரகசியம் அவர்களுக்குத் தெரியும்.

ஃ

தனம், வெள்ளவத்தை.
கே: தற்கால நவநாகரீக இளம் பெண்களின் தலையைப் பற்றி நீர் என்ன எண்ணுகிறீர்?
ப: புறத்தலையை அலங்கரிப்பதுபோல் தங்கள் உள்தலையையும் அவர்கள் அழகுபடுத்தப் பழகிக்கொள்வார்களானல் என்று எண்ணுவேன்.

ஃ

பி. சின்னத்துரை, கரவெட்டி
கே: நான் குதிரை ரேசுக்குப் பணம் கட்ட விரும்புகிறேன். வெற்றியடைவேனா?
ப: வெற்றியடைவது குதிரைக் கொம்பாகத் தான் இருக்கும்.

ஃ

"திருமாவ", கொச்சிக்கடை.

ஃ

கே: தமிழ் பாஷையில் ஆண்பால் இல்லாத ஒரு பதமும் பெண்பால் இல்லாத ஒரு பதமும் உங்களால் சொல்ல முடியுமா?
ப: முடியும்—விபசாரிக்கு ஆண்பாலும் விதவானுக்கு பெண்பாலும் கிடையா

ஃ

எஸ். செல்லத்துரை, களுதாவளை.
கே: எனக்கு எப்பொழுதும் மறதியாக இருக்கிறது. இதற்கு என்ன செய்வது?
ப: இதற்கு ஒரு மருந்து உண்டு. ஆனல் அதைச் சொனனல் நீ மறந்துவிடுவீரே.

ஃ

எம். யோசப், திரிகோணமலை.
கே: நமது மந்திரிகள் எங்கு உணவு தேடுகிருர்கள்?
ப: உணவு உள்ள இடத்தில் தேடமாட்டார்கள்

புத்திசாலி ஒருவர் ஆகாயத்தில் பறந்து அதைத் தேடுவார்

சு இரத்தினசிங்கம், கோட்டைமுனை
கே: உம்மையோர் மந்திரியாக்கினல் முதலில் நீர் செய்யும் காரியம் என்னவாயிருக்கும்.
ப: நிச்சயமாக என் முதல் காரியம் ராஜினமாவாய் இருக்காது.

ஃ

"நேசன்", களனி.
கே: நான் சிரஞ்சீவியாய் வாழ விரும்புகிறேன். என்ன செய்யவேண்டும்?
ப: எங்காவது ஒரு பார்பர் சலூனில் வேலை சமபாதித்துக கொள்ளவும் அங்குதான் உம்மால சிரத்தைச் சீவி வாழமுடியும்.

ஃ

பி. ரி. எம்., மட்டக்களப்பு
கே: மதத்தின் மூலமாகத்தான் ஒருவன் கலியாணம் செய்யவேண்டுமா?
ப: அவசியமில்லை; ஆனல் பெண்ணின் சம் மதத்தின் மூலமாகத்தான் செய்ய வேண்டும். ஃ

திருமதி டானியேல், யாழ்ப்பாணம்.
கே: அரசியல் வாதிக்கு வாழ்க்கைப்படுவதை விட ஒரு ஆண்டிக்கு வாழ்க்கைப் படலாம என்று என் தங்கை கூறுகிருள். இது சரியா?
ப: ரொம்பசரி; அரசியல் வாதியின் வாழ்வும் வீழ்வும் கண நேரத்தில் நடைபெறும். ஆண்டியின் வாழ்க்கை தினமும் அரைப்படி அரிசி சம்பாத்தியத்தோடு அமைதியாகப் போய்க்கொண்டிருக்கும்.

"பக்தன்", பரந்தன.
கே: கடவுளுக்குப் பகைவர் யார்?
ப: கடவுளை ஏதோ பக்கத்து வீட்டுக்காரர்போல் பாவித்து அவரைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் அளக்கும் புராணிகர்கள். ஃ

"சுந்தரி", புன்னலைக்கட்டுவன்.
கே: தற்காலக் குடும்பப் பெண்களின் வயிற்றை எதற்கு ஒப்பிடலாம்?
ப: களனி கங்கைக்கு ஒப்பிடலாம். வருஷா வருஷம் நீர் மட்டம உயர்வதும் வற்றுவதும் வழக்கம் அல்லவா?
கே: தமிழ் புறக்கணிக்கப்பட்டால் தாம் மந்திரி சபையிலிருந்து வெளியேறிவிடுவதாக மந்திரி பொன்னம்பலம் கூறுகிருரே இதன் அர்த்தம் என்ன?
ப: மந்திரி சபையில் இருந்து வெளியேற்றப்பட்டுவிடலாம் என்ற நிலைமையோ சந்தேகமோ ஏற்பட்டால் சில மந்திரிகள் இப்படித்தான் ஏதாவது நொண்டிச் சாட்டை முன்கூட்டியே சொல்ல ஆரம்பித்துவிடுவது வழக்கம். திரு பொன்னம்பலத்தைப் பொறுத்தவரையில் இந்த சாட்டுக்கூட சாரமற்றது. ஏனெனில் இந்த மகானுபாவர் மந்திரி சபையில் சேர்வதற்குமுன்பே அனியாய ஒற்றையாட்சி முறையினல் இந்த நாட்டில் தமிழும் தமிழரும் புறக்கணிக்கப்பட்டாயிற்று. இனிப் புறக்கணிப்பதற்கு ஒன்றுமில்லை.

★ இவ்வாரம் ரூ. 3-00

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இசையில் மயங்கி பசியை மறந்த யானை

## அயர்ந்து உறங்கிய அதிசயம்

## குறக்குல மங்கை பாடிய குறிஞ்சிப்பண்

"பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்" எனப் பராசக்தியை வேண்டினார் பாரதி. இசைக்குருகாத மனிதன் எதற்கும் உருகான் என்பது திண்ணம். மேலும், "பாட்டுக்குருகாத மனிதன், படுகொலைக்கஞ்சாப் பாதகனாவான்" எனப் பகன்றார் ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர். ஆறறிவுடைய மனிதனேயன்றி அடவி வாழ் துட்ட மிருகங்களும் பறவைகளும் பாம்பும் இசையில் ஈடுபட்டுருகித் தம்மை மறந்தின்புற்று நிற்கும் என்பது மிகையன்று! நிற்க,

குறிஞ்சி நிலத்தில் தினைப் புலங்காத்துவந்த குறக்குலக் கோதையொருவள் பாடிய குறிஞ்சிப் பண்ணைக் கேட்டவுடன் தனது கொடும் பசியினிமித்தம் தினைக் கதிரைத் தின்று பசியாற வந்த குஞ்சரமொன்று தன் பசியையும் மறந்து இசையில் லயித்து நின்று மெய்மறந்து தூங்கி விட்டதென்று சொன்னால் இக்கால மக்களிற் பலரும் இதனை நம்பமாட்டார்கள் என்பதுறுதி எனினும், சேரநாட்டுச் செந்தமிழ்க் கவிஞர் "இளங்கோ"வின் சொல்லோவியமொன்றைக் கீழே கற்பவர்கள் இதன் உண்மையையுணர்ந்து மகிழ்வரென்பது திண்ணம். எனவே இதுபற்றிய செய்தியை இனிக் கீழே கற்றின்புறுவோம் வாரீர் இன்றமிழன்பர்காள்!

வடநாடு சென்ற மன்னன் "சேரன் செங்குட்டுவன்" வஞ்சமாநகர்க்குத் திரும்பி வருவதற்கு முதனாளிரவில் "கோப்பெருந்தேவி" தனது மணிமனையின் பொற்கட்டிலில் படுத்துப் புரண்டவண்ணம் கணவன் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். செங்குட்டுவன் திரும்பிவரும் செய்தியைச் செவிலித்தாயர்கள் ஓடோடியும் வந்து தேவிக்கறிவிக்கின்றார்கள். இதற்கிடையில் வெகுதூரத்திலே மலையடிவாரத்திலிருந்து வரும் பாட்டொலி, தேவியின் காதுகளில் கேட்கின்றது. மலையடிவாரத்தில் குறிஞ்சி நிலத்தில் வாழும் குறக்குல மங்கையொருவள் மேற்சொன்ன குறிஞ்சிப் பாட்டைத் தன் குயிலொத்த இனிய குரலால் பாடுகிறாள். என்ன காரணத்துக்காக—எந்த நிலையில்—அவள் குறிஞ்சிப் பண்ணைப் பாடினாள் என்பதை இனிக் கீழே காண்போம்.

தினைப் புலத்தில் தினைக் கதிர்கள் நன்கு முதிர்ந்து திரண்டுள்ளன. அதனைத் தனமுங் காவல்காத்துவந்த வேட்டுவன் மூங்கிலில் விளைந்த கள்ளை மிகுதியாகக் குடித்து விடுகிறான். போதை தலைக்கேறிவிடவே புத்தி தடுமாறிய கானவனது கையிலிருந்த கவணும் கற்களும் நழுவிக் கீழே விழுகின்றன. அவனும் தனது பணியை அறவே மறந்துவிடுகிறான். ஆனால் அவன் ஆற்றவேண்டிய அலுவலை அவனது வாழ்க்கைத் துணைவியாகிய வேட்டுவச்சி ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டு நிற்கிறாள். இந்நிலையில் சேரன் செங்குட்டுவன் திரும்பிவருஞ் செய்தி அவளுக்கு எட்டுகிறது. இச் செய்தியைத் தனது குறிஞ்சிப் பண்ணில் அமைத்துப் பாடுகிறாள் அக்குற மங்கை. அவள் பாடிய பாட்டின் கருத்தாவது:—

"வடநாடு சென்ற சேர மன்னன் மாற்றலருடன் வன்சமர் புரிந்து தும்பைத் திணையையும் அவர்களை வெல்லுதலாகிய வாகைத் திணையையும் முடித்து விரைந்து செல்லும் யானையின் மீதமர்ந்து வந்துகொண்டிருக்கின்றான். தினைக் கதிரைத் தின்ன வரும் யானைகளே! வெற்றிக்குக் காரணமாகவிருந்த அரசனது யானையை வரவேற்க நீங்கள் செல்லுங்கள்' என்ற கருத்தையமைத்துக் குறிஞ்சிப்பாடலைப் பாடித் தினைப்புலத்தைக் காத்து நிற்கின்றாள். தினைக் கதிரைத் தின்ன வந்த பணைத்துதிக்கை யானையொன்று இவள் பாடிய இன்னிசையில் ஈடுபட்டு அயர்ந்து உறங்கிவிட்டதாம். என்னே, இவள் பாடிய இன்னிசையின் இனிமை!

மேற்சொன்ன செய்தியை ஒரு சொல்லோவியமாகத் தீட்டிப் புகழ்பெற்றுள்ளார் "கவிஞர் இளங்கோ". அவ்வோவியம் கீழ் வருமாறு:—

'அமைவிளை தேறல்
மாந்திய கானவன்
கவண் விடு புடையூஉக்
காவல் கைவிட—
வீங்கு புனம் உணீஇய
வேண்டி வந்த
ஓங்கியல் யானை தூங்கு
துயில் எய்த
வாகை தும்பை
வடதிசை சூடிய

—சுதந்திரன்—

**சுருளையாண்டிப் பாவலர்**

வேகயானையின் வழியோ
நீங்கெனத்
திறத்திறம் பகர்ந்து
சேணோங்கு
இதணத்துக்
குறத்தியர் பாடிய
குறிஞ்சிப்பாணியும்''

(அரும் பொருள்)

அமை—மூங்கில்; தேறல்—கள்; புடையூஉ—புடைக்கின்ற; உணீஇய—உண்ணுதற்கு; தூங்கு துயில்—அயர்ந்த உறக்கம்; வாகை—பகைவர்களை வெல்லுதல்; தும்பை—பகைவருடன் போரிடல்; சேண்—தூரம்; இதணம்—பரண்; குறத்தியர்—குறிஞ்சிநில வேட்டுவப் பெண்கள்; பாணி—பாட்டு

# தாகம்

[சாந்தி]

பட்டம் பதவிகள் பெற்றுச் சிறந்திடப்
பாவியென் மனம் நாடவில்லை—இந்தக்
கட்டுக்கள் விட்டிசை கொட்டிப் பறந்திட—
காதல் பிறந்ததெடி.

சொத்துச் சுகபோகம் சுற்றமும் பெற்றிடச்
சிந்தையில் ஆசையில்லை—குண
மெத்தச் சுதந்திரம் பெற்று நிறைந்திட
மேவியதென் ஆசை.

விஞ்ஞானம் பற்பல வித்தைகள் கற்பதில்
வேகம் பிறக்கவில்லை—பெரும்
அஞ்ஞானம் என்றாலும் ஆதிரை மேய்ப்பதில்
ஆர்வம் பிறந்ததெடி.

கள்வெறியூட்டிடும் கன்னியர் பார்வையில்
காதல் பிறக்கவில்லை—வீசிக்
கண்ணொளி கான்றிடும் கதிரின் கூர்மையில்
காமம் பிறந்ததெடி.

மென்னிடை மாதரை மேவியணைந்திட
மோகம் பிறக்கவில்லை—அனல்
தன்னிடைப் பாய்ந்தகைத் தாவியணிந்திடத்
தாகம் பிறந்ததெடி.

ஆடிடும் நீரிடை ஆடிக் களித்திட
ஆக்கை துடித்ததில்லை—எதிர்
ஓடிடும் நீரிடை எதிர்ப்புறம் நீந்திட
ஊக்கம் பிறந்ததெடி.

வீசிடும் தென்றலில் வெண்ணிலவாடிட
விருப்புக் கொள்ளவில்லை—அவி
வீசிடும் ஆழியின் மோதலைக் கண்டுளம்
இருப்புக் கொள்ளவில்லை.

கன்னல் பொழிந்திடுங் காதற் சுரங்களைக்
கேட்டு மகிழ்ந்ததில்லை—அதிர்
மின்னல் இடியுடன் மேக முழக்கத்தில்
மேனி குளிர்ந்ததெடி.

வண்டிரை செய்திடு வண்ண மலரிலே
[illegible]
நின்றிருள் [illegible] கண்டதில்
நேசம் வளர்ந்ததெடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**சுதந்திரன் சந்தா விபரம**

| | இலங்கை | இந்தியா |
|---|---|---|
| 1 வருடம் | 8-00 | 8-0-0 |
| 6 மாதம் | 4-50 | 4-8-0 |
| தனிப் பிரதி | 0-15 | 0-2-6 |

சந்தா முன்பணமாகச் செலுத்தப்படவேண்டும். பத்திரிகை உள்ளூரில் சனிக்கிழமைகளில் கிடைக்கும்படி தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

சர்குலேஷன் மானேஜர்,
'சுதந்திரன்'
194எ. கட்டாதெரு, கொழும்பு-12.

**வயது 80 ஆனால் வாதமே இல்லை**
**ஏன்சீனடி தைலம் பாவித்துவந்தேன்**



ஓ எல். எம். யூசுப்

என்று பெருமை பேசும் வயோதிபர்கள் எத்தனையோ பேர்

ஹெர்னியாவாதம் அண்டவாதம், பாரிசவாதம், உழுக்கு உடைவு, முறிவு, நரம்பு வலி, சிறுபிள்ளைவாதம (Infantile Paralysis) நோவு, கொழுவல் போன்ற எவ்வகை காலஞ் சென்ற நோய்களானாலும்சரி திரசுகம்.

மெலிந்துபோன உடம்பை கொழுக்கச் செய்யும். மேல்நாட்டு இராசவைத்தியர்களின் புகழ்பெற்ற ஒரே தைலம் இதுவே

சிறிய போத்தல் 2 தபால் செலவுடன் ரூபா 3-50
" " 4 " ரூபா 5-50

ஓ எல் எம் யூசுப் வாதநோய் நிபுணர்


Rahmania Medical Stores
& Dispensary,
327, Dematagoda Road, Maradana, Colombo-9.

**இரும்பு பணப் பெட்டிகள்**

லண்டன் நகர ஜோண்டான் லிமிட்டெட்டாரால் உற்பத்தி செய்யப்பட்டவை

1795-ம் ஆண்டில் ஸ்தாபகம் - மிகப் பழைய ஸ்தாபனம் - உலகத்திலேயே மிகக் கைதேர்ந்த க்ஷேமயந்திர சிற்பிகள்

நெருப்பைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது அதனுள் உள்ள பொருள்களை இதுவரை நெருப்பால் நாசப்படவில்லை.




கள்வர்களைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது இதுவரையில் கள்வரால் திறக்கப்படவில்லை.

**டொட்வெல் & கம்பெனி லிமிட்டெட்.**

ஆபீஸ் பொருட்கள் விற்பனைப் பகுதி

18/20, குவீன்ஸ் வீதி, கோட்டை, கொழும்பு.

போன்: 2301




(தொடர் நவீனம்)

## “பெற்றமனம் பித்து பிள்ளைமனம்கல்லு”

சுந்தரம் வீட்டைத் திறந்து வெளியேறிய இரவு விடிந்ததும் அவனுடைய தாயான மருதையம்மா அவசர அவசரமாக அடுப்பை மூட்டி ஒரு கப் “பெட் காப்பி” தயாரித்து கையில் எடுத்துக்கொண்டு சுந்தரத்தின் ரூமுக்குச் சென்றாள். அந்த அதிகாலை வேளையில் அவனுடைய படுக்கை வெறிச்சென்றிருக்கக்கண்டு திகிலடைந்தாள் மருதையம்மா வேறு நாட்களாக இருந்தால் அவளுடைய மனம் அவ்வளவு சஞ்சலமடைந்திருக்காது. பட்டணத்தில் வைகறைப் பொழுதில் படுக்கைவிட்டெழுந்து பழகியவன் எழுந்து வெளியே உலாவப் போயிருப்பான் என்றுஎண்ணியிருப்பாள் முதல்நாள் கணவனுக்கும் மகனுக்குமிடையே நடந்த வாக்குவாதம் விஸ்வரூபமெடுத்து “உன் மகன் தகப்பனுடைய பிடிவாதத்தை சகிக்கமாட்டாது ஆற்றிலோ குளத்திலோ விழுந்து தற்கொலை செய்துகொண்டான்’ என்று ஓலமிடுவது போலிருந்தது. அவளுடைய இருதயம் வேகமாக அடித்துக்கொண்டது அவசர அவசரமாக கணவனை எழுப்பி “சுந்தரத்தின் கட்டில் காலியாய் கிடக்கிறது; சுந்தரத்தைக் காணவில்லை” என்று துக்கத்தால் தொண்டையடைக்கக் கூறினாள்.

“எங்கே போயிடப் போறான்! காலையில் எழுந்து காட்டுப்பக்கம் வெளிக்குப் போயிருப்பான்” என்றார் மாரிமுத்துக் கங்காணி படுக்கையில் எழுந்திருந்து கண்ணைக் கசக்கிக் கொண்டு.

“காப்பி குடிக்காமல் அவன் கக்கூசுக்குப் போற வழக்கமே கிடையாதே! நேற்று குழந்தையை வந்ததும் வராததுமாக திட்டினீர்கள் என் கண்மணியை ‘தொலைந்து போ’ என்று விரட்டினீர்கள் கடுஞ்சொல் கேட்டறியாத என் செல்வம். ராத்திரி சரியாக சாப்பிடவுமில்லை மூலையை விட்டு என்னென்னமோ எல்லாம் யோசித்துக் கொண்டிருந்தான். உங்களுடைய ஏச்சுக்கும் வசவுக்கும் பயந்து என கண்மணி ஆத்திலே குளத்திலே விழுந்திட்டா நான் என்னபண்ணுவேன்” என்று மருதையம்மா தலையை இரு கைகளாலும் தாங்கிப் பிடித்துக் கொண்டு தரையில் உட்கார்ந்து பிலாக்கணம் வைக்க ஆரம்பித்துவிட்டாள்.

மாரிமுத்துக் கங்காணி எழுந்து சென்று சுந்தரத்தின் படுக்கையைப் பார்த்தார். படுக்கை விரிப்பு கொஞ்சமும் கலையாமல் விரித்தபடியே இருந்தது. கட்டிலில் ஆளபடுத்திருந்த சுவடே தெரியவில்லை. அவரையும் திகில் பற்றிக் கொண்டது. எனினும் தைரியத்தை கைவிடாமல் “விடிந்ததும் விடியாததுமாக ஏண்டி ஒப்பாரி வைக்கிறே? உன்னுடைய அருமை மகன் எங்கேடி போகப்போகிறான். அப்படித்தான் தொலைந்துபோனு யத் திரும்பி வருகிறான்” என்றார்.

“யாரோ ஒரு அயோக்கியப் பயல் எழுதிய கடிதத்தை வெச்சுண்டு அவனைக் கரிச்சுக் கொட்டினேள். அவன் ரோசக்காரன். செய்யாததைச் செய்து உயிரை மாய்த்துக்கொண்டால் இந்தப் பாவி என்ன செய்வேன்! ‘பெத்த மனம் பித்து; பிள்ளை மனம் கல்லு’ என்று சொல்றது சரியாத்தானே இருக்கு. இந்தப் பாவியைத் தவிக்கவிட்டு என் கண்ணே! சுந்தரம்! நீ எங்கேடா போயிட்டே!” என்று நீட்டி முழக்கி அழுதாள் மருதையம்மா.

“அவனுடைய ரோசத்தை நீதான் மெச்சிக்கணும். கடிதத்தில் எழுதியிருந்தது வாஸ்தவம்தான் என்று அவனேதான் ஒத்துக்கொண்டானே! இன்னொரு தகப்பனாயிருந்தால் அவனை அதிலேயே இரண்டு துண்டாக வெட்டிப்போட்டிருப்பான். நானென்றபடியால் சும்மா விட்டேன்’ அந்த ரோசக்காரப் புலிக்கு நான் என்னதான் சொல்லிவிட்டேன்? ‘நான் சொல்றபடி செய்றதாயிருந்தாச் சரி; இல்லாட்டா எங்கேயாவது தொலைந்து போ” என்றேன் அது பெரிய குற்றமா? பெற்ற பிள்ளையைத் திருத்தி நடத்தக்கூட ஒரு பிதாவுக்கு அதிகாரமில்லையா?”

“நல்லா திருத்தினேள் போங்கோ. வயசுவந்த பிள்ளைகளைப் பெற்றோர் கண்டிக்க முடியுமா? ‘இப்படிச் செய்யாதே அப்படிச் செய்’ என்று சொல்லிப் பார்க்கிறது. கேட்டாக் கேட்குதுகள்; கேட்காட்டிப்போகுதுகள் என்று விட்டுவிடுவதுதான் புத்திசாலித்தனம் தொலைந்து போ, நாசமாப் போ என்று திட்டுறதுதான் அழகோ!”

“போனது போகட்டும்! மருதாயி! எழுந்திருந்து ஆகவேண்டியதைக் கவனி! அந்தப் பயல் வீட்டை விட்டு ஓடீட்டான் என்று நாலுபேர் அறிஞ்சா நமக்குத்தான் வெட்கம் பத்து மணிவரை பொறுத்திருந்து பார்ப்போம். அப்பவும் அவன் திரும்பாவிட்டால் மேற்கொண்டு என்ன செய்வதென்பதை யோசிப்போம்”

மருதையம்மா மூக்கைச் சீறி மூலையில் எறிந்து விட்டு முந்தானையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு எழுந்து அடுக்களைக்குள் சென்றாள். கங்காணியார் மகனுக்காக தயாரித்த, குளிர்ந்துபோன காப்பியை குடித்துவிட்டு வெளியே கிளம்பினார்.


பகல் பத்து மணிக்கும் சுந்தரம் திரும்பி வரவில்லை அன்று இரவு பத்து மணியாகியும்கூட சுந்தரம் வந்தபாடில்லை அவன் திரும்பி வருவானென்ற நம்பிக்கையில் இதுவரை பொறுமையாக இருந்த கங்காணியும் மனைவியும் கவலைகொள்ளலாயினர் சரியாகக்கூடச் சாப்பிடாமல் இருவரும் படுக்கைக்குச் சென்றனர். மனதில் கவலை குடிகொண்டிருக்கும்போது நித்திரை வருமா? சுந்தரத்தைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று இருவரும் கூடி யோசித்தனர். விடியும் சமயத்தில்தான் இருவரும் கண்ணயர்ந்தனர். மாயாண்டியின் தப்புச் சத்தம் அவர்களை வெகுநேரம் துயில் கொள்ளவிடவில்லை. “தாண்ட நகின; நகின நகின” என்ற சப்தம் மலைகளில் எதிரொலித்துக் கொண்டிருந்தது மாரிமுத்துக் கங்காணியின் மனம் “சுந்தரம் வருவானா? வருவானா?” என்ற கேள்வியைக் கேட்டுக்கொண்டிருந்தது

காலையில் தோட்டத்து தபால்களை போஸ்ட் ஆபீஸிலிருந்து எடுத்து வரும் கூலியாள் தபால் மூட்டையை தலையில் சுமந்து கொண்டு ஆபீஸை நோக்கிச் சென்றான். சுந்தரம் ஒரு வேளை கடிதம் போட்டிருக்கலாம் என்ற நப்பாசையால் கங்காணி அந்தக் கூலியாளைத் தொடர்ந்து சென்றார். “மெயில் பேக்கை” அவிழ்த்து கடிதங்களை மேசையில் கொட்டினார். கங்காணியார் தன் பெயருக்கு கடிதங்கள் இருக்கா என்று எட்டிப் பார்த்தார். கிளாக்கர் “விறுவிறெ”ன்று கடிதங்களை “சோட்” பண்ண ஆரம்பித்தார். கங்காணிக்கு ஒரு கடிதமும் சுந்தரத்துக்கு ஒரு கடிதமும் இருந்தது. இரண்டையும் கங்காணியிடம்கொடுத்தார் தனக்கு வந்த கடிதத்தின் மேல் விலாசத்தைப் பார்த்தார் கங்காணி, அது தனது மகன் சுந்தரத்தின் கையெழுத்தென்பதை “சட்”டென்று புரிந்துகொண்டார் அவருடைய மனம் மகிழ்ச்சியினால் துள்ளிக்குதித்தது. கடிதத்தை பிரித்து வாசித்தார் மகனுடைய கடிதம் அவர் வயிற்றில் பாலை வார்த்தது. இந்த சந்தோஷ சமாச்சாரத்தை மருதையம்மாவுக்குத் தெரிவிக்க வீட்டுக்கு ஓடினார் மகன் சுந்தரம் மல்லிகைத் தோட்டத்தில் சௌக்கியமாயிருக்கிறான் என்ற செய்தி கேட்டு மருதையம்மா “எல்லாம் அந்தக் காடேறிக் கருப்பனின் கருணைதான். என்னுடைய பிரார்த்தனை வீணாய்போகவில்லை. காளியாத்தா உனக்கு கோழி வெட்டி

என்று கூறிக் கன்னத்தில் போட்டுக்கொண்டாள்

மாரிமுத்துக் கங்காணி மகனுக்கு வந்த மற்றக் கடிதத்தை உடைக்கலாமா வேண்டாமா என்று எண்ணியவாறு சுந்தரத்தின் சூட் கேஸைத் திறந்து சுந்தரத்துக்கு அனுப்புவதற்காக அவனுடைய உடுப்புகளை அதற்குள் அடுக்கலானார். பெட்டியின் அடியில் ஒரு கவர் இருந்தது அதை எடுத்துத் திறந்து பார்த்தார். அதற்குள் ஒரு இளம் பெண்ணின் புகைப் படம் இருந்தது “ஓகோ! இது அந்த யாழ்ப்பாணத்துக் குட்டியின் படமாயிருக்க வேண்டும்” என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டார் ஆம் அவர் நினைத்தது சரிதான் ரஞ்சிதம் தன் ஞாபகார்த்தமாக சுந்தரத்துக்கு கொடுத்த புகைப் படம்தான் அது. சுந்தரம் அதைத் தன்னுடைய சூட்கேஸின் அடியில் போட்டு வைத்திருந்தான் அது மாரிமுத்துக் கங்காணியின் கண்ணில் பட்டு கையில் சிக்கிக் கொண்டது “குட்டி ஜோராய்த்தானிருக்கு. ஆனால் நமக்குத் தோதுப்படாது” என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டார். அந்தப் படத்தைப் பார்த்த பின்னர் அன்று சுந்தரத்துக்கு வந்த கடிதமும் அந்தப் பெண்ணின கடிதமாக இருக்கலாமென்ற சந்தேகமுண்டாயிற்று. அந்த மாயக்காரி அவனை தன் வசப்படுத்துவதற்கு அதில் என்னென்ன எழுதியிருப்பாளோ தனக்குப் பயந்து மல்லிகைத் தோட்டத்துக்குப் போய் வேலை ஏற்றுக்கொண்டிருக்கும் சுந்தரத்துக்கு அக்கடிதத்தை அனுப்பி வைத்தால் என்னென்ன வினை விளையுமோ! என்றெல்லாம் கங்காணி எண்ணினார். கடைசியில் ‘எதற்கும் அக்கடிதம் இப்போதைக்கு என்னிடமே இருக்கட்டும்” என்ற முடிவுடன் படத்தையும் கடிதத்தையும் தனது கோட் பாக்கெட்டில் வைத்துக்கொண்டார். சுந்தரத்தின் உடுப்புகளை சூட் கேஸுக்குள் ஒழுங்காக அடுக்கி ஒரு ஆள்மூலம் அன்றே சுந்தரத்துக்கு அனுப்பி வைத்தார்.

அந்தக் கடிதம் அவருடைய கோட் பையிலிருந்து உறுத்திக்கொண்டேயிருந்தது. எடுத்து கவரைக் கிழிக்காமல், மடித்து ஒட்டப்பட்ட முனையின் இரு ஓரத்துக்கும் தண்ணீர் தடவி கொஞ்ச நேரம் பொறுத்து முனையை நகத்தினால் மெதுவாக பெயர்த்தெடுத்து பக்குவமாக திறந்தார் உள்ளேயிருந்த கடிதத்தை அவசர அவசரமாக பிரித்தார். மணி மணியான எழுத்துக்கள், ஆனால் அவர் அடைந்த ஏமாற்றத்துக்கு அளவேயில்லை. அக்கடிதம் ஆங்கிலத்தில எழுதப்பட்டிருந்தது. கங்காணிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அந்தத் தோட்டத்து சின்னக் கிளாக்கர் சிவபாலன் சுந்தரத்தின் வயதுப் பையன். சிறு வயதில் அவனும் சுந்தரத்துடனேயே கண்டியில் படித்தான. ஜே. எஸ். ஸி. வரை படித்துவிட்டு மேற்படிப்



பெட்டியின் அடியில் ஒரு கவர் இருந்தது. அதை எடுத்துத் திறந்து பார்த்தார் மாரிமுத்து கங்காணி. அதற்குள் ஒரு இளம் பெண்ணின் புகைப் படம் இருந்தது. “ஓகோ, இது அந்த யாழ்ப்பாணத்துக் குட்டியின் படமாயிருக்க வேண்டும்” என்று மன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லோயாத் திட்டத்தின் சுயரூபம் அம்பலம்

## அங்கு தமிழர் குடியேறத் தயங்கும் காரணம்

சூலகம் ஏழைகளின் இரத்தக் கண்ணீர். தமிழ்ப் பேசும் மக்களின் தவிட்டு வீடுகள் தீக்கிரை கடைகளில் கொள்ளை. பாமரமக்களிடம் பரபரப்பு. எங்கும் குழப்பம். திகில் பீதி ஒற்றைக் கண்ணாட்சியின் ஒரு தலைப் பாரபட்சம் இத்தனையும் கிழக்கு மாகாணத்தில் கல்லோயாவில் நடைபெறுகின்றன.

மக்கள் நடுநடுங்கக்கூடிய இந்தப் பயங்கரமான குழப்பம், இம்மாதம் 22ந் திகதி ஆரம்பித்தது. ஜனநெருக்கடியும், பிரயாணக் கஷ்டமும் நிறைந்த கல்முனைப் பகுதியிலே, மணற் புழுதி கிளம்ப, அறுபது மைல் வேகத்தில் காற்றைப் பிளந்து கொண்டு சென்ற ஒரு கல்-ஓயா லொறி, புடவை விற்கும் காத்தான் குடியைச் சேர்ந்த ஓர் பொட்டணி வியாபாரியைக் குப்புற வீழ்த்தி தரையோடு நசுக்கிவிட்டது. மட்டக்களப்பு மக்களையே கீழ்த்தரமாக மதித்து, ஒருவித இறுக்குடன் உலாவும் சில வெளியூர் வாசிகளின் அடாத செயல்களைக்கண்டு, மாதக்கணக்கில் மனங்கொதித்துக் கொண்டிருந்த மக்களிடையே இந்தச் செயல் அடக்கமுடியாத ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டது. 'லொறி'யை ஓட்டி வந்த அந்த 'டிறைவரை' நொருக்கப் புடைத்தனர். ஆத்திரம் தணிந்தபின் தம் இல்லம் ஏகினர். கலகத்திற்கு காரணம் இதுதான் என்று சொல்லப்படுகிறது.

நான்காவது முறையாக உண்டாகிய இக்கலகத்திலே, அம்பாறை, இங்கினியாக்கலை, சடையன் தலாவை, சவளக்கடை முதலிய இடங்களில் வயிற்றுப் பிழைப்புக்காக வேலைசெய்யும் சிறுபான்மையோராகிய முஸ்லிம்கள், கடல்போல் திரண்டுவந்த சிங்களவர் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டனர். ஏழைப்பாமர மக்கள் பதறியோடினர் வயல்வெளிகளினூடே ஓடினர். காடுகளிலே மறைந்தனர். காடுகளிலே மறைந்தவர்களில் எத்தனையோ பேர் இன்னும் வீடு வந்து சேரவில்லை. அவர்களுடைய இருப்பிடங்களையெல்லாம் மருட்டி மூட்டி எரித்தனர். கடைகளெல்லாம் கொள்ளையடிக்கப்பட்டன. விறகு வெட்டி வியாபாரம் செய்து பிழைக்கும் ஏழை முஸ்லீம்களின் வண்டிகளெல்லாம் இடையிலே மறிக்கப்பட்டு தீ மூட்டப்பட்டுச் சாம்பராயின மாடுகளின் குதிகால் களெல்லாந் தறிக்கப்பட்டன. அயலூர்களிலிருந்து அங்கு சென்ற ஏழைக் குடும்பங்களெல்லாம், அட்டூழியங் தாங்கமாட்டாது கல்முனைக்கு ஓடிவந்து இருக்கவும் இடமில்லாது திண்டாடுகின்றனர்.

### திகிலும் பரபரப்பும்

நற்பிட்டி முனையிலே இரவிற் கள்ளமாகப் புகுந்து கலகக்காரர் வீடுகளுக்குத் தீ மூட்டினர். சனங்கள் பதறியெழுந்து நெருப்பை யணைத்தனர். போலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அலுவலகாரைக்குத் தந்தி பறந்தது. போலிஸ் படைகள் வந்து குவிந்தன. பெரும்பாலும் சிங்களப் போலிஸ்கள் தான். நற்பிட்டிமுனை முஸ்லீம்கள் தான் கைதிகளாயினர். அவர்கள் போலிஸ் ஸ்டேசனில் அடைபட்டுக் கிடக்கின்றனர்.

சென்ற குழப்பங்களில் பட்டுத்தேறிய சம்பாந்துறை மக்கள் ஆயத்தமாகவே இருந்தனர். தம் இனத்துக்காகத், தம் சொந்த நாட்டிலே சுதந்திரமாகச் சீவிக்கும் உரிமை பறிபோகிறதே என்றுணர்ந்து சிங்களவரை விரட்டியடிக்கத்தொடங்கினர் ஆனால் அடக்குமுறை கையாளப்பட்டு, துப்பாக்கி வீரர்களின் வேட்டுக்களும் பறந்தன குழப்பம் அடங்கியது உள்ளங்குமுறி உந்தப்பட்ட கல்முனை முஸ்லீம்கள் பல்லாயிரக் கணக்காகப் பட்டணத்துக் கூடாகப் பவனி வந்தனர். ஆர்ப்பாட்டத்துடன் சென்ற அவ்வீரர்கள், தமது வல்லமையையும் கூட்டுறவுணர்ச்சியையும் காட்டிவிட்டு அக்கிரமங்கள் எதுவும் செய்யாது அமைதியாக வீடு சென்றனர். கடைகளெல்லாம் மூடப்பட்டன. இன்னும் ஒரு கிழமை மூடப்பட்டிருக்கும்.

இதற்கு முன்பும் மூன்று குழப்பங்கள் நடந்துள்ளன முதலிரண்டும் முஸ்லிம்கட்கும் சிங்களவருக்குமிடையில். மற்றது தமிழருக்கும் சிங்களவருக்குமிடையில். தமிழர்களையோ முஸ்லிம்களையோ ஒரு முறையல்ல இரண்டு முறையல்ல, நான்கு முறைகள் எதிர்த்துக் குழப்பமுண்டாக்கி வேலைத்தலங்களில் நின்றும் வெருட்டியடிப்பது சந்தேகத்துக்குரிய விஷயம் குடியேற்றத்திட்டமும் அதோ இதோ என்று நெருங்கிவர அற்ப காரியங்களைப் பிரமாதப் படுத்திப் பெரிய குழப்படி செய்து ஆரவாரித்துத்திரிவது, மேலும் சந்தேகத்தைக் கிளப்புகிறது.

சிங்களவரின் மணமே இல்லாதிருந்த இப்பிரதேசத்தில் அவர்களைக் குடியேற்றுவதற்காகத் தான் அரசாங்கம் வஞ்சனையாகக் கல்லோயாத் திட்டத்தை ஆரம்பித்ததுபோலும்? நாளுக்கு நாள் பயமுறுத்திக்கொண்டுவந்தால் சிறுபான்மையினர் யார்தான் அங்கு சென்று குடியேறத்துணிவர்? கடைசியில் திரு செல்வநாயகம் அவர்களின் தீர்க்கதரிசனம் பலித்துவிடும். கல்லோயா-ஏன் கிழக்கு மாகாணம் முழுவதுமே சிங்கள நாடாகிவிடும் இங்கு வதியும் சிங்கள மக்கள் தெருக்களில நடமாடும்போதும் பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும்போதும் மற்றவர்கள் தங்களுக்குப் பயந்து ஒடுங்கிச் சீவிக்கவேண்டுமென்னும் பாவனையில் நடந்துகொள்ளுகிறார்கள்

### பத்திரிகைகளின் பட்சபாதம்

குதிரை குழியில் விழுந்து செத்தாலும் அல்லது கவர்னர் ஜெனரல் குதிரைப் பந்தயத்துக்குப் போனாலும் கொட்டையெழுத்தில செய்திகள் வெளியிடும் ஏரிக்கரைப் பத்திரிகைகள் இங்கு நடக்கும் பித்தலாட்டங்களைப் பற்றி ஒன்றும்பேசாது மௌனம் சாதிப்பதன் மர்மந்தான் என்ன? முஸ்லிம் இனம் அழிந்து தொழியட்டும் என்ற இழிந்த எண்ணமா? அல்லது அரசாங்கத்துக்கு அடங்காத உண்டாகும் என்ற பீதியா? சொந்தமாக ஒரு பத்திரிகை இல்லாத முஸ்லிம் இனம் யாரிடம் சென்று முறையிடப் போகின்றது. தமிழ் பேசும் மக்களை ஓம்ற முரலான சுதந்திரனும் தனசாயாயல ..!

### குழந்தையின் இடத்தில் கூரிய ஆயுதம்

சுதந்திரமெனும் கூரிய ஆயுதம் பாவிக்கும் பண்பற்றவர்களான சுயவர்களிடம் கொடுக்கப்பட்டது. அவர்கள் சுதந்திரம் தங்களுக்குமட்டுந்தான் என்ற ... ... ... மகாடுமைகால மன்னர்களாக நடமாடுகின்றனர். மற்ற இனங்களை-சிறுபான்மையினரைக் கிள்ளுக்கீரையாக மதிக்கும் இவர்களுக்கு அரசியல் பெருந்தன்மையற்ற-இன வெறியர்களான பண்பாடற்ற மாக்களுக்கு சோல்பரி கொடுத்த பரிசு இதுதானா?


**வேல் தைலம்**
தலைவலி, ஜலதோஷம் வாதம், ஜன்னி முதலியவைகளுக்கு சிறந்த நிவாரணி.



## தமிழ் நாட்டின் சிறந்த வெளியீடுகள்

1. திராவிடன் ஆசிரியர் என். வி. நடராஜன், வார இதழ் தனிப்பிரதி விலை சதம் 15
2. தனி அரசு ஆசிரியர் எ. வி. பி. ஆசைத்தம்பி மாதம் இருமுறை இதழ் தனிப் பிரதி விலை சதம் 15
3. தீப் பொறி ஆசிரியர் சி. பி சிற்றரசு வார இதழ் தனிப்பிரதி விலை சதம் 15
4. மறு மலர்ச்சி ஆசிரியர் ஏ எம் யூசுப் வார இதழ் தனிப்பிரதி விலை சதம் 20
5. தமிழ்த்தென்றல் ஆசிரியர் வி. வி. இராமசாமி எம். எல். ஏ. மாத இதழ் தனிப்பிரதி விலை சதம் 25.

### இலங்கை முழுவதும் ஏஜண்டுகள் தேவை


மாதிரிப் பிரதிக்கும் நிபந்தனைகளுக்கும் எழுதுக.

சோல் ஏஜண்டுகள்:

**மோகன் குமார் அன் கோ.**

நீர் 66 1/5 1ம் குறுக்குத்தெரு கொழும்பு 11





# கல்கி
## தீபாவளிமலர்

இவ்வருஷத்தில் 'கல்கி' தீபாவளி மலர் தித்திக்கும் தேன்மலராக வெளிவருகின்றது. கண்ணைப் பறிக்கும் வர்ணச்சித்திரங்கள், குலுங்கச் சிரிக்க வைக்கும் ஹாஸ்யச் சித்திரங்கள், திகட்டாத இனிமை திகழும் கதைகள் கட்டுரைகள், வழக்கமான இதர அம்சங்களுடன் வெளிவருகின்றது:

**தனிப்பிரதி தபாற் செலவு உட்பட ரூ. 5-75**

வாசக நேயர்கள் முன்பணமனுப்பி தம் பிரதிகளைப் பதிவுசெய்ய விரும்புகிறோம்.

சோல் ஏஜன்ஸ்.

**வெஸ்டன் நியூஸ் ஏஜன்ஸீஸ்,**

1790 ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு டெலிபோன்: 5998



## மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள் சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ 10-0-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 13-0-0 (தபால் செலவு தனி)

## கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள் (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 15-0-0 ஜெல்லி விலை ரூ. 8-8-0 (தபால் செலவு தனி)

சிலோன் ஏஜன்ட் New Colombo Medical Stores, 82, Main St. Colombo-11

Mfgrs SEENU & CO., POST BOX. 1636. MADRAS-1

பிரான்ச் 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நீதி அரசரை கர்வபங்கம் செய்த வழக்கறிஞர்

## 'நாயிடம் ஆலோசனை கேட்கிறீர்களென்று நினைத்தேன்'

## வழக்கு விசாரணையில் ரஸமான சம்பவங்கள்

டில்லி சுப்ரீம் கோர்ட்டில் ஒரு வழக்கில் பிரபல வக்கீல் ஒருவர் நீதிபதிகளுக்கு வழக்கை எடுத்துரைத்து விவாதம் நடத்திக்கொண்டிருந்தார் ஐந்து நீதிபதிகளும் ஏககாலத்தில் அவரிடம் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தனர். இத்தொந்தரவைச் சகிக்கமாட்டாத வக்கீல், "நீதி அரசர்களே, தங்களின் கேள்விகளுக்கெல்லாம் பதிலளிக்க நான் 5 'ஜூனியர்' வக்கீல்களை என்னுடன் அழைத்து வந்திருக்கவேண்டும்' என்று சிரித்துக்கொண்டே கூறினார்.

வழக்கறிஞர் நீதிபதி பதவியொன்றை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றால், அதிகப்படியான கடமை உணர்ச்சியும் கண்ணியமான மனப்பாங்கும் இருக்க வேண்டுமென்பதோடு தனது சுதந்திர வாழ்க்கையையும், ஏராளமான வருமானத்தையும் கைவிடத் தயாராகவும் இருக்கவேண்டும். ஒரு சமயத்தில் சென்னையில் பிரபல வக்கீல் ஒருவர் நீதிபதி பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார் அவரது மறுப்புக்கு காரணம் கேட்டபோது அவர் கூறியதாவது: "நீதிபதி அவர்களே, நாள் முழுவதும் பயனற்ற வெறும் சொற்களைக் கேட்டுக் கொண்டிருப்பதைவிட ஒவ்வொரு நாளும் ஒரு சில பயனற்ற சொற்களைப் பேசுவதையே அதிகமாகவிரும்புகிறேன்"

∴

நீதிபதிகளைப் பற்றியும் பல விசித்திரமான கதைகளுண்டு அதிகமாகப் பேசும் நீதிபதிகள் பேசாத நீதிபதிகள், உரக்கச் சப்தமிடும் வாயாடி நீதிபதிகள், தூங்கும் நீதிபதிகள் முதலிய பலரகமான நீதிபதிகளுண்டு. டாக்டர் ராஷ்பிஹாரி கோஷ் (வங்காளம்) ஹைகோர்ட் பிரதம நீதிபதி முன்னால் ஒரு வழக்கை விவாதித்துக் கொண்டிருந்தார் நீதிபதி அடிக்கடி குறுக்கிட்டு சரமாரியாகக் கேள்விகளைக்கேட்டு அவரைத் திணறடித்துக் கொண்டிருந்ததால் அவரால் விவாதத்தை வெற்றிகரமாக நடத்த முடியவில்லை. அவருக்குக் கோபம் வந்துவிட்டது. "நீதி அரசரே, பேசுவதற்காக எனக்குச் சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பேசாமலிருப்பதற்காக தங்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது அவ்வாறு இருவரும் நடந்து கொள்வோம்" என்று கூறி அந்தப் புகழ்பெற்ற வழக்கறிஞர் நீதிபதிக்கு வாய்ப்பூட்டுபோட்டார்

இங்கிலாந்தில் பிரதம நீதிபதி ஒருவர் கோர்ட்டுக்குச் செல்லும்போது தனது நாயையும் கொண்டுபோவார். வக்கீல்கள் விவாதித்துக் கொண்டிருக்கும் போது அந்த நாயை அடித்துக் கொண்டிருப்பது அவருடைய வழக்கம். ஒரு சந்தர்ப்பத்தில் உணர்ச்சியுடன் பேசிக் கொண்டிருந்த ஓர் வழக்கறிஞர் திடீரென்று தனது பேச்சை நிறுத்திவிட்டார். அப்பொழுது பிரதம நீதிபதி 'மிஸ்டர், நீங்கள் தொடர்ந்து பேசலாம்'' என்றார். அதற்குப் பளிச்சென்று பதில் வந்தது "தாங்கள் (நாயிடம்) ஆலோசனை கேட்டுக் கொண்டிருக்கிறீர்களென்று நான் நினைத்தேன்' என்று.

சட்டங்கள் எல்லாவற்றையும் கரைத்துக் குடித்து விட்டதாகவும், இனி மேல் படிப்பதற்கு ஒன்றும் பாக்கி கிடையாதென்றும் கர்வம் கொண்டிருந்த ஒரு நீதிபதி முன்னிலையில் பிரபல வக்கீல் திரு. ரணடே ஒரு வழக்கை விவாதனம் செய்து கொண்டிருந்தார் நீதிபதி குறுக்கிட்டு 'தங்கள் கருத்து சரியென்றால், அதுதான் சட்டமாயிருந்தால், எல்லா சட்டப் புத்தகங்களையும் நான் சுட்டெரித்துவிட வேண்டியதுதான்' என்றார். உடனே ரெண்டு திருப்பிக்கொடுத்த அந்த வக்கீல் 'ஏன், தாங்கள் அவைகளை வாசிக்கக் கூடாதா?' என்று கூறி கர்வபங்கம் செய்தார்.

சில சந்தர்ப்பங்களில் வக்கீல்கள் நீதிபதிகளிடமிருந்து வாங்கிக் கட்டிக் கொள்வதுமுண்டு வழக்கறிஞர் திரு லிங்கராஜ் பணிக்கிராஹி ஒரு வெள்ளைக்கார நீதிபதி முன்னால் வழக்கொன்றை நடத்திக் கொண்டிருந்தார். நீதிபதி தனது கட்சிக்காரரை வெறுக்கிறாரென்பதைத் தெரிந்து கொண்ட அவர் நீதிபதியை நோக்கி "தாங்கள் கூறுவதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது' என்று கூறினார் உடனே நீதிபதி "அதில் ஆச்சரியமென்ன? நான் சொல்வதை ஏற்றுக்கொள்ளாமலிருப்பதற்குத்தானே உங்களுக்குப் பணம் கொடுக்கப்படுகிறது'' என்றார்.

∴

சில சமயங்களில் சாட்சிகள் வக்கீல்களுக்குச் சுடச் சுட சூடு கொடுப்பது [illegible] குழந்தைகள் உண்டென்று வக்கீல் கேட்டார். அவள் "ஆண்கள்'' என்றாள். "அப்படியானால், எல்லாம் ஒன்பது" என்றார் வக்கீல். இதனை ஆட்சேபித்த அவள் 'எல்லாம் அல்ல, ஒரு தடவைக்கு ஒன்று தான்' என்று பதிலளித்தாள்.

ஒரு டாக்டரைக் குறுக்கு விசாரணை செய்த வக்கீல் ஒருவர் "டாக்டர், நீங்கள் செய்த தவறுகளின் விளைவு ஆறு அடிகளுக்கு கீழ் பூமியில் புதைபடுவது தானே?'' என்று கேட்டார். "ஆம், வக்கீல்கள் செய்யும் தவறுகளின் விளைவு ஆறு அடிகளுக்கு மேல் ஆகாயத்தில் தொங்குவதைப்போல'' என்று டாக்டர் பதிலளித்தார்.

பலதார மணம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் நீதிபதியை நோக்கி 'என்னை மன்னிக்க வேண்டும் நல்ல மனைவி ஒருவளைத் தேர்ந்தெடுப்பதற்காகவே நான்கு பெண்களை மணந்து கொண்டேன்'' என்று கூறினார்.

ஒரே கேள்வியை மீண்டும் மீண்டும் கேட்பது வக்கீல்களின் வழக்கம். டார்லிங் பிரபு என்ற நீதிபதி முன்னிலையில் நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு வழக்கில் ஓர் சாட்சி வக்கீலின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தனக்கு மூன்று குழந்தைகள் உண்டு என்று கூறினாள். குறுக்கு விசாரணையின் கடைசியில், அவளுக்குக் குழந்தைகள் உண்டா வென்று வக்கீல் மீண்டும் கேட்டார் நீதிபதி குறுக்கிட்டு "மிஸ்டர், நீங்கள் குறுக்கு விசாரணையை ஆரம்பிக்கும்போது அவளுக்கு மூன்று குழந்தைகள் இருந்தனர்'' என்றார்

உலகிலேயே வக்கீல் தொழிலைப்போல மகிழ்ச்சியளிக்கக் கூடிய தொழில் வேறொன்றும் கிடையாது. சோ வோல்டர் ஸ்கொட் கூறுகிறார்: 'நமது பாபங்களினால் பாதிரிகளும், நமது நோய்களினால் வைத்தியர்களும், நமது துரதிஷ்டத்தினால் வக்கீல்களும் வாழ்கிறார்கள்''

ஒரு வக்கீலின்றி நீங்கள் வாழ முடியுமென்றாலும் அவரின்றி நீங்கள் சாகமுடியாது

(திரு லிங்கராஜ் பணிக்ரஹியின் ரேடியோ பிரசங்கத்தின் சுருக்கம்)


# மூல வியாதிக்கு

## கருணைக்கிழங்கு லேகியம்

"எல்லாவித மூலம், பவுத்திரம், வியாதிகளையும் சத்திர சிகிச்சையின்றி சுலபமாகவும் நிரந்தரமாகவும், நிச்சயமாகவும் குணப்படுத்தக்கூடிய அரிய சஞ்சீவி ஆயிரக்கணக்கான நோயாளர்கள் குணமடைந்துள்ளனர். மூல முளைகள், ரத்தம், சீழ்வடிதல், பவுத்திரம், கட்டி, நீர்கசிவு, குடலிறைச்சல், மலபந்தம் தேககாங்கை யாவும் அறவே ஒழிந்துவிடும். உத்தரவாதமான மருந்து. பழனி தண்டபாணி வைத்தியசாலையின் பிரசித்தபெற்ற தயாரிப்பு.

24 நாள் டின் 1-க்கு ரூ. 7-50
மூலமுளைக்களிம்புபுட்டி 1க்கு ரூ. 1-00

## நெல்லிக்காய லேகியம்

(VITAMIN சத்துக்கள் நிறைந்தது.)

உடல் மெலிந்தவர்களுக்கும் பலவீனப்பட்டவர்களுக்கும் பிரசித்தமான மருந்து. இருதயம், சுவாசசயம், குடல், எலும்புகள் வலுப்படும் பசி, ஜீரணசக்தி உண்டாகும் இருமல், க்ஷயம், பாண்டு, சோகை, மூல வியாதிகளுக்கும் உதவியான மருந்து.

20 ரூபா எடை விலை ரூ. 4-8-0

## இராஜவீரிய லேகியம்

நிகரற்ற தாதுபுஷ்டி மருந்து. ஜீவாதாரக் கருவிகளைப் போஷித்து சரீர புஷ்டியும், நரம்புகளுக்கு வலுவும் இல்வாழ்க்கையில் இன்பமும் உண்டாக்கும். ருசியுள்ள மருந்து.

20 ரூபா எடை விலை ரூ. 4-8-0

பார்சல் செலவு சேர்த்து M. O. அனுப்பவும்

கேட்லாக் இனாம்.

## தண்டபாணி வைத்யசாலை

போஸ்டல் வீதி, பழனி (S. I.)

Thandapani Medical Hall, PALANI (S. I.)



பல்லாயிரக் கணக்கானோரின் பாராட்டுதலைப் பெற்ற ஒரே குடை

## ஒட்டக மார்க் குடையே

கொடுக்கும் பணத்திற்கு உழைக்கும் சின்னம்.




ரெஜிஸ்டர் நம் 12336

இன்றே ஒன்று வாங்கி இயற்கையின் தாக்குதல்களிலிருந்து உங்களைக் காப்பாற்றுங்கள்

நீண்ட நாள் உழைப்பிற்கும் உங்கள் பணத்திற்குப் இன்று உலகில் உத்தரவாதமளிக்கும் ஒரே குடை.

இலங்கையில் இப்போது அதிகமாகு வரவழைக்கப்படுகிறது

ஐக்கியா டிரூப்பரி ஸ்டோர்ஸ்


6, சைனா வீதி, கொழும்பு-11.

போன்: 5113.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகத் திருநாள் ஹஜ்ஜுப் பெருநாள்

## இறைவனுக்காக மகனை வெட்டிய இபுராஹீம்




### இஸ்லாமிய கம்யூனிஸத்திற்கு மன்னர்களே தடை

(ஜனாப். ஏ. எஸ். அப்துஸ்ஸமது)

இஸ்லாமியர் கொண்டாடும் விசேஷ பெருநாட்களுள் இந்த ஹஜ்ஜுப் பெருநாளென்ற 'ஈதுல் பித்ர்' தினம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில் இது மூன்று தனிப்பட்ட விசேடங்களைக் கொண்டதாகும். இவை ஒவ்வொன்றும் எத்தனையோ இஸ்லாமிய உபதேசங்களையும், கொள்கைகளையும் விளக்கிக்கொண்டிருப்பதல்லாமல் சரித்திர கால தியாகமொன்றின் மகத்துவத்தையும் கூறிக்கொண்டிருக்கின்றது. எனவே இத்தினம் உலக முஸ்லிம்களுக்கு ஒரு உன்னத பெருநாளாகத் திகழ்வதில் வியப்பில்லை.

#### கனவும் நனவும்

நபி இபுருகீம் (அலை) அவர்கள் இறைவனில் கொண்ட அளவில்லாத பக்தியின் காரணமாக மக்கா மாநகரத்திலுள்ள புனித "கஃபா" என்னும் புண்ணிய ஸ்தலத்தைக் கட்டினார். இறைவனுக்காக நாம் ஒரு மகத்தான தொண்டு புரிந்தோம் என்னும் எண்ணம் அவர் மனதில் குடிகொண்டிருந்தது. இறைவனும் அவர் தியாகத்தை உண்மையாகவே பரீட்சித்துப் பார்க்க நினைத்தான்.

ஒரு நாளிரவு நபி இபுறாகீம் (அலை) அவர்கள் ஒரு கனவு கண்டார்கள் மகத்தான ஆனால் பயங்கரமான அவரால் நினைக்கவே முடியாத அந்தக் கனவு தனி தனை இறைவன் பரீட்சிக்கும் உத்தேச நிலையைக் காட்டிநறு. 'ஆம்! அவருடைய ஓரேயொரு திருக்குமாரரான நபி இஸ்மாயீலை வெட்டி தனக்காக தியாகஞ் செய்யும்படி இறைவன் 'ஒரு ஆஞ்ஞை பிறப்பித்தான்" இதுதான் கனவு தானுந்தன மனைவியும் நெடுநாட்களாக இறைவனிடம் பிரார்த்தித்து, பன்றுபடி ஈன்ற ஓரே குமாரர் இஸ்மாயீல் அந்தக் குமாரரை தன் கையாலேயே வெட்டி அவரை அளித்தவனுக்கே அர்ப்பணிக்கட்டுமாம். நியாயமான கேள்விதான. ஆனால் பெற்ற மனம் தாழ வில்லை

இறைவனுக்காக தம் குமாரரை வெட்டி தியாகம் செய்வதுபற்றி அவர் துக்கிக்கவில்லை ஆனால் தனக்கு இரு பிள்ளைகள் இருந்தாலாவது பறவாயில்லையே இந்நிலையில் எத்துணை தியாகமாகத்தான் இருந்தாலும் சரி, ஒரு தாய் தமது ஒரே ஒரு செல்வப் புதல்வனை வெட்ட சம்மதிப்பாளா? எனது உள்ளத்தின் உயிர் நிலையான அருமை மகன் என்ன சொல்வார்? இறைவனின் சோதனையே மகத்தானது தான். எனினும் தம் செல்வப் புதல்வனைவிட, தம அன்பு மனைவியை விட இறைவன் ஆஞ்ஞை உயர்வானது தானும் தன் மனைவியும் தம் புதல்வனில் கொண்டிருக்கும் பாசத்தைவிட மனித வர்க்கத்தின்மீது இறைவன் கொண்டிருக்கும் பாசம் மகத்தானது. எனவே இறைவன் கட்டளை நிறைவேற்றப்பட்டே தீரவேண்டும். இது அவரின் இறுதியான தீர்ப்பாயிற்று.

இதுபற்றி மனைவியிடம் கூறினார் மகனிடம் பிரஸ்தாபித்தார். ஆம் இது இறைவன் கட்டளை எங்களால் நிராகரிக்க முடியுமா? என்றே அவர்களும் கூறினர் "அன்பின் தந்தையே ஆண்டவனின் ஆஞ்ஞையை நிறைவேற்றுவதில் ஒரு க்ஷணமேனும் தாமதியாதீர்கள். உங்கள் கடமையைச் செய்யுங்கள்" என்று துரிதப்படுத்தினர் வீரமகன் நபி இஸ்மாயீல் (அலை) அவர்கள் இறைவன் ஆஞ்ஞை நிறைவேற்றப்படப் போகிறது தம் புதல்வரைக் குப்புறக்கிடத்தி "அல்லாஹு அக்பர்" என்ற மணி மந்திரத்துடன் ஓங்கி வெட்டினார். நபி இபுருகீம் அவர் நெஞ்சு அடைத்திருந்தது. இரு கண்களிலுமிருந்தோடிய நீர் அவருடைய கண்களை மறைத்திருந்தது.

என்ன ஆச்சரியம். வெட்டுப்படவில்லை. இபுருகீம் நபியவர்கள் உடம்பு நடுங்கியது கத்தியை மீண்டுமொருமுறை தீட்டிக் கொண்டார். மூன்று முறை வெட்டியாயிற்று. கழுத்துத் துண்டிக்கப்படவில்லை. எவ்வித காயமுமில்லை ஆனால் ஒரு செம்மறி ஆடு கழுத்துத் துண்டிக்கப்பட்டு பக்கத்தில் கிடந்தது. அப்பொழுது ஆகாயத்திலிருந்து ஓர் ஒலி பிறந்தது. "இபுருஹீமே! உனனுடைய தியாகத்தை மெச்சி ஏற்றுக்கொண்டேன் உன்னுடைய மகனை இனிமேல் வெட்டாதீர்" என்று ஆகாயத்திலிருந்துவந்த அந்த அசரீரி வாக்கைக் கேட்டு தந்தையும் மகனும் பெருமிதமடைந்தனர் இந்த தியாகத்தின் ஞாபகார்த்த தினந்தான் இன்றுவரை முஸ்லிம்கள் ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடி வருகின்றனர். இந்த மகத்தான தியாகத்தை நினைவூட்டும் இத்தினம ஒவ்வொரு முஸ்லிமையும் தமது மதத்தின்பால் தம் கடமையையும் இறைவன்பால் சிறந்த தியாகங்களையும் செய்யும்படி தூண்டிக்கொண்டிருக்கின்றது.

#### புனித ஹஜ்ஜும் புளகாங்கித காட்சியும்

இந்த பரிசுத்த தினத்திலேதான் இஸ்லாத்தின் நான்காவது கடமையான புனித ஹஜ்ஜையும் நிறைவேற்றும்படி செல்வம் படைத்த சகல முஸ்லிம் ஆண் பெண்கள்மீதும் விதியாக்கப்பட்டுள்ளது செல்வம் இல்லாதவர்களும் முடியுமானால் செய்யலாம் பரிசுத்த கஃபாவில் தொழுது வேண்டிய கிரியைகளை எல்லாம் செய்யும் ஒவ்வொருவரும் தங்களை பரிசுத்தவான்களாக்கிக் கொள்வதோடு, மேலும் பாபவழியினின்றும் விலகிக் கொள்ளல் வேண்டும்

இந்தத் தினத்தில் இஸ்லாமிய சகோதரத்துவப் மக்கமா நகரில் மிளிரும் உலகின் பல கோடியிலிருந்தும் கோடிக் கணக்கான மக்கள் அங்கு கூடுவர். எல்லோரும் ஓரே நோக்குடன், ஓரே கொள்கையுடன் ஓரே இறைவனை வணங்கும் பக்திப் பரவசக் காட்சி மிக மகத்தானது. அரசனும் சரி ஆண்டியும்சரி எவரையும் மதிப்பிடுக் கொள்ளல் முடியாது. ஆண் பெண்கள்கூட வித்தியாசமின்றியே புளங்குவா எவருக்கும் விசேஷ மதிப்பு, விசேஷ சலுகைகள் அங்கில்லை. எவரும் வேற்றுமை பாராட்டக் கூடிய சூழலும் அங்கில்லை எல்லோரும் சகோதரராக சமமாகவே தோன்றுவர்.

#### "சதகா" என்னும் தர்மம்

செல்வம்படைத்தோருக்கு மக்கா யாத்திரை விதியாக்கப்பட்டது போல, இன்னுமொரு விஷயம்கண்டிப்பாக விதியாக்கப்பட்டுள்ளது அதுதான் "சதகா" என்னும் தர்மமாகும். இன்றைய கம்யூனிசத்திற்கு மூலகாரணமாகவிருந்த இஸ்லாமிய கம்யூனிசம் அதுதான். பணக்காரர் எல்லோரும் தங்களுடைய செல்வங்களை ஏழைகளுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பது இஸ்லாமிய அரசியல், மத கொள்கையாகும்.

பண்டைக்காலத்தில் குறிப்பாக உமர் (றலி) அவர்களுடைய அரசாட்சிக்காலததில் இஸ்லாமிய கம்யூனிசம் பூரண வெற்றியைக் கொடுத்துள்ளது. பணக்காரர்களெல்லோரும் தம் செல்வங்களை ஏழைகளுக்கும் பகிர்ந்தளிப்பதோடு மக்களெல்லோரும் அரசாங்கத்திற்காக உழைக்க, அரசாங்கமே மக்களுக்கு உணவு உடை ஆதியாம் தேவைகளைப் பூர்த்தி செய்தது இன்று இஸ்லாமிய நாடுகளில் மன்னர்களே கோடீஸ்வரர்களாகி விட்டதுதால் இது சாத்தியமில்லை. இன்றேல் உலகத்திற்கே ஒரு முன்மாதிரியாக ஜனநாயக கம்யூனிசத்தை நடைமுறையில் கொணரலாம்.

இந்த சதகாவானது ஏழைகளுக்கும் ஏழை இனஜனத்தவர்களுக்கும் கொடுக்கப்படல் வேண்டும். இது பணமாயின் நூற்றுக்கு இரண்டரை வீதமும் மாடாயின் நாற்பதுக்கு ஒன்றும் ஆடாயின் முப்பதுக்கு ஒன்றும் இன்னோரன்ன விகிதாசாரப்படி பொன், வெள்ளி, காணிகள், தோட்டங்கள்போன்ற எல்லாவற்றிற்கும் இவ்வேழை வரி கொடுபட வேண்டும்.

வெறுமனே விளையாடிக் கழிக்கும் தினமல்ல இது. இஸ்லாமிய தியாகத்தை, இஸ்லாமிய கடமைகளை, நம பொறுப்புகளை உலக முஸ்லிம்களுக்கு வருடா வருடம் உணர்த்தி நிற்கும் ஒரு மாபெரும் புனித தினமாகும். "அல்லாஹு அக்பர்"

# புதுமைக் கதம்பம்

நார்வே தேசத்தில், கல்யாணத்துக்கு வருகிறவர்கள் எல்லோரும் மணப்பெண்ணுக்கு ஜாடிகளில் வெண்ணெயை நிரப்பி வெகுமதி கொடுப்பார்களாம்.

ஊசியால் நைபல் முதலிய வேலைகள் செய்வதில் இவ்வுலகத்திலேயே மிகக் கெட்டிக்காரர்கள் ஜப்பான் தேசத்து ஆடவர்கள். அவர்களுக்கு அடுத்தாற்போல் ரஷய நாட்டுப் பெண்மணிகளைச் சொல்லலாம்.


கடற்கரையிலுள்ள நண்டுகள் மிகவும் நரம்பு தளர்ந்த உயிர்பிராணிகள் ஆகாயத்தில் ஒரு பெரிய இடி இடித்தால் அந்த ஓசையின் அதிர்ச்சி தாங்க முடியாமல் நூற்றுக்கணக்காய் அவை உயிர் விடுமாம்.

சில மலர்களைத் தேச அடையாளங்களாக உபயோகப்படுத்தி வருகிறார்கள் பிரான்ஸ் தேசத்திற்கு அல்லி மலரும் கிரீஸ் தேசத்தில் நீலோற்பலமும் அயர்லாந்தில் 'ஷாம்ராக்' என்னும் மலரும் இங்கிலாந்தில் ரோஜாவும் எகிப்து தேசத்தில் பொற்றாமரையும், ஸ்காட்லாண்டிற்கு நெருஞ்சிலும் ஸ்பெயின தேசத்திற்கு மாதுளையும் தேச அடையாளங்களாம்.

பிரான்ஸ் தேசத்தில் பாரிசு நகரத்தில் வெயின் நதியில் லாக்ரெநவுலர் என்ற [illegible] கதலர்கள் சந்தை ஒன்று கூடுமாம் கல்யாணமாகாத இளம் பெண்களும் ஆடவர்களும் அவ்விடம் சென்று அவர்கள் சௌகரியத்திற்காக அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற பந்தயங்கள், ஆடல், பாடல் முதலியவைகளை அனுபவித்து, ஒவ்வொருவருக்கும் நட்பு உண்டாக அதன் பலனாகப் பிறகு கல்யாணம் செய்து கொள்வார்களாம். அங்கு ஆயிரக்கணக்காய் கூட்டம் கூடுமாம்.

யூத வகுப்பினரால் வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்படும் 'எத்ராக்' என்ற ஒரு வித நாரத்தைத்தான் உலகத்திலுள்ள பழங்கள் எல்லாவற்றிலும் மிக விலை உயர்ந்தது. இப்பழத்தின் விலை ஐந்து பவுனும். பழம் மிகவும் கசப்பானதால் தின்பதற்குமுடியாதாம். ஆனால் அது மிக்க வாசனையுடையதாம். ஒரு பெரிய மண்டபம் முழுவதும் அதன் சுகந்தம் கமகமவென்று வீசும். வேறு ஊதுவத்தி சாம்பிராணி முதலிய வாசனைத் திரவியங்களே தேவையில்லையாம்.

—எஸ். எஸ். ராமகிருஷ்ணன்




அமெரிக்க ஜனாதிபதி பதவிக்குக் குடியரசுக் கட்சியின் அபேட்சகராகப் போட்டியிடும் ஜெனரல் ஐஸன் ஹோவரின் கையை உதவிஜனாதிபதிபதவிக் போட்டியிடும் குடியரசுக் கட்சி அபேட்சகர் செனடர் ரிசர்ட் நிக்ஷன் தூக்கிப்பிடித்துக்கொண்டிருக்கிறார். திருமதி ஐஸன் ஹோவரும் (இ-து) திருமதி நிக்ஷனும் அதைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றனர்.

## ஜனக்குரல்

### கள்ளத்தோணி காபுரா

ஐயா,

1948ம் வருஷம் பிப்ரவரி மாதம் என் சகோதரர் ராஜு என்டவர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து சுமார் 5 வருஷம் வரை அவர் மூனமல்தெனிய, சிதுலவ, நீர்கொழும்பு நாத்தாண்டிய என்ற பல ஊர்களில் வேலைசெய்து வந்துள்ளார். சென்ற 2-8-52 திகதியில் நாத்தாண்டிய என்ற ஊரில் குளிக்கச்சென்றபடியால் போலிசாரால் கைது செய்யப்பட்டு 'லாக்அப்' செய்து கேஸ் போட்டார்கள். தவறைக் கேட்டபோது கள்ளத்தோணியில் வந்ததாய் சந்தேகப்படுவதாகவும் மற்ற விபரம் கோர்ட்டில் தெரியமாறு சொல்லவே, 150-00 ரூபாய் ரொக்க ஜாமீனில் கூட்டி வந்தோம். பின்ட 15ம் திகதி தீர்ப்பில் அவரை இந்தியா அனுப்ப பிரதமர் ஆர்டர் வந்திருப்பதாய் சொல்லி இந்தியாவுக்கே அனுப்பி விடடார்கள். அனுப்பி விட்டார்கள் என்பதற்காக வருத்தப்படா விட்டாலும், அவர் இவிடம் இருந்த நாளில் கஷ்டப்பட்டு உழைத்த சம்பளம் கொடுக்கல் வாங்கல் இத்தியாதிகளை அப்படியே விட்டுள்ளது. நீதியற்ற இலங்கை அரசாங்கம், இனிமேலாவது இந்தவிதமான சொல்லைகளைக் கைவிட்டு நியாய அடிப்படையில் ஜனநாயக ரீதியில் நம் பிரதமர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார் என்று பெரிதும் நம்புகிறேன்.

இங்ஙனம்,
பெ. மு முத்துக்சோன்,
குளியாப்பிட்டிய.

### படிப்பகங்களில் கூட பட்சபாதமா?

எங்கள் ஊர் திருகோணமலையில் இரண்டு இலவசப் படிப்பகங்கள் உண்டு இவ்விரண்டும் நகர சபையால் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. இவைகள் மூறையே பெரிய கடையிலும் மடத்தடியிலும் உள்ளன.

பெரியகடை வாசிகசாலையில் தருவிக்கப்படும் வார, மாத வெளியீடுகளில் பல மடத்தடி வாசிகசாலையில் கிடையாது தனிப்பட்ட கலைதப்புத்தகங்களைக் கூட அங்கேயே குவித்து வைத்திருக்கிறார்கள் ஒரு சிலவற்றையாவது இங்கு அனுப்பி வைப்போமே என்ற பெருந்தன்மை கூட இல்லாமல். சுமார் அறுபதுக்கு மேற்பட்ட தனி புத்தகங்கள் இருந்தும், ஒரு ஐந்து புத்தகமாவது அனுப்பி வைக்க முடியவில்லை இவர்களால் இதுபற்றி பலர் மனம் வருந்துகிறார்கள். பொது மக்கள் வரிப்பணத்தில் இயங்கும் படிப்பகத்தில் கூட பட்சபாதமா?

இங்ஙனம்,
க. சிவகுரு,
திருகோணமலை.

சுதந்திரன்
SUTANTIRAN

194எ, தட்டாதெரு போன்: 3411

1952 ஆகஸ்ட் மீ 31 உ

# மந்திரியின் "டயரி"

திரு டி. எஸ். சேனநாயகா காலம் சென்றதும், பிரதம மந்திரி பதவியைக் கைப்பற்றுவதற்காக திரை மறைவில் பல சதிகள் நடைபெற்றனென அப்பொழுது வதந்திகள் அடிபட்டன யு என். பியின் பிரதான உப-தலைவரும், பாராளுமன்ற சபைத் தலைவருமாகிய சேர் ஜோன் கொத்தலாவல பிரதமர் பதவிக்கு உரிமைகோரினாரென்றும், ஆனால் கடைசியில் சிலர் அவரைக் காலை வாரிவிட்டதால், அவரது முயற்சிகள் பயனளிக்காமல் போய்விட்டனவென்றும் கூறப்பட்டது. அதெல்லாம் பொதுத் தேர்தலுக்கு முன்பு நடைபெற்ற பழைய கதை.

அன்று நடைபெற்றதாகக் கூறப்படும் சம்பவங்களையும், பிரதமர் பதவிக்காக நடந்த சதிச் செயல்களையும் விளக்கும் பிரசுரமொன்று "தோட்டப் பாதையிலே" என்ற பெயருடன் இப்பொழுது வெளிவந்திருக்கிறது இது யாரோ ஒரு முக்கியமான மந்திரியின் 'டயரி' என்றும் கூறப்படுகிறது. அதில் அடங்கியுள்ள விஷயங்களைக்கொண்டு அதன் ஆசிரியர் யாராயிருக்கலாம் என்று ஊகிக்க முடியுமேயன்றி, அது யாரால் எழுதப்பட்டது என்பதைச் சட்டப்படி நிரூபிக்கமுடியாது. அப்பிரசுரம் முழுவதையும் பத்திரிகையில் பிரசுரிக்க இயலாதிருப்பதற்கு மேற்கண்ட காரணம் முக்கிய தடையாகும்

பிரதமரின் ஆசனத்தைக் கைப்பற்றுவதில் நடைபெற்றதாகக் கூறப்படும் சதிகளையும், பித்தலாட்டங்களையும், போட்டிகளையும் துரோகச் செயல்களையும் நூதன மறைமுக வழியில் மக்களிடம் பிரசாரம் செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் அப்பிரசுரம் எழுதப்பட்டிருக்கிறதென்பதை அது வெளியிடப்பட்டுள்ள முறையினின்று தெரிந்துகொள்ளலாம் அதன் ஆசிரியர் மந்திரிப் பதவியிலும் தொடர்ந்து ஒட்டிக்கொண்டிருக்கவேண்டும், சதிச் செயல்களை மக்களுக்கு தெரிவிக்கவும்வேண்டும், ஆனால் அவ்வாறு செய்வதன் பொறுப்பு தன் மீது விழுந்துவிடவும் கூடாது என்ற ஒரு நோக்கத்துடன்தான் இந்த புது வழியைக் கையாண்டிருக்கவேண்டும். எந்த விஷயம் இதுவரை மறைக்கப்பட்டிருந்ததோ, அந்த விஷயம் இரும்புத் திரையைக் கிழித்துக்கொண்டு, மக்கள் அரங்கத்திற்கு வந்துவிட்டது.

ஆறு பிரதிகள்தான் விநியோகிக்கப்பட்டதாம். ஆனால் பிரதிகளின் எண்ணிக்கை ஆயிரம் பதினாயிரமென்று தினே தினே பெருகிக்கொண்டுவருகிறது அப் பிரசுரத்தை வாசிப்பவர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விலைமதிக்கமுடியாத பொக்கிஷமென்றெண்ணி தமக்கென ஒரு பிரதியை எழுதி எடுத்து அதைக் தம் நண்பர்களுக்குக் காட்டுகின்றனர். எனவே அதனை எழுதியவரின் முக்கிய நோக்கம் நிறைவேறிவிட்டதென்றுதான் கூறவேண்டும்.

பிரசுரத்தில் குறிப்பிட்டிருக்கும் விஷயங்கள் முழுவதும் உண்மையா, அல்லது மெய்யும் பொய்யும் கலந்த அரைகுறை உண்மையா? அல்லது எல்லாம் வெறும் 'கப்ஸா'தானா என்பதை சரிவர நிர்ணயித்துக்கொள்வது கடினமாயிருக்கிறது. ஆனால் சம்பவங்களையும், நபர்களையும், அவர்கள் எழுதியதாகக் கூறப்படும் கடிதங்களையும் சரியாகச் சம்பந்தப்படுத்தி ஒழுங்கு ரீதியாக எழுதப்பட்டிருப்பதை வாசித்தவர்கள். முழுவதும் கலப்பற்ற உண்மை என்றுதான் கருதுவார்கள்.

இப் பிரசுரம் இப்போது பொதுஜன அபிப்பிராயத்தைப் பாதிக்கும் ஒரு வெளியீடாகிவிட்டது எனவே இதை ஒரு அற்ப விஷயம் என்று அரசாங்கம் அலட்சியம் செய்துவிடக்கூடாது. அந்தப் பிரசுரத்தில் உண்மை எவ்வளவு பொய் எவ்வளவு என்பது பற்றி பொது மக்களுக்கு ஓர் அறிக்கைமூலம் தெரிவிக்கவேண்டியது அவசியம் முற்றும் பொய்யாய் இருப்பின் இதன் மூல ஆசிரியரைக் கண்டுபிடித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டியது இன்றியமையாததாகும்.

பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டவை உண்மையாக இருக்கும்பட்சத்தில் அரசாங்கத்தில் நெருக்கடி ஏற்படுவது மட்டுமின்றி, யு. என். பி. ஸ்தாபனத்தில் பெரும் பிளவு ஏற்பட்டு அது இன்னை பின்னமாக சிதறிப்போவதும் தவிர்க்கமுடியாததாகிவிடலாம்.

# மீண்டும் திரு. நல்லையா மந்திரி ஆவாரா?

மாஜி தபால் தகவல் மந்திரி திரு நல்லையா உடல் நலமுற்று திரும்பியதும் அவருக்கு வேறேதாவது மந்திரிப் பதவி கிடைக்க இடமுண்டா? அரசியல் அவதானிகளிடையே இது சம்பந்தமாக இப்போது சர்ச்சை நடைபெற்று வருகிறது.

திரு நல்லையாவின் அனுதாபிகள் பலர் திரும்பவும் திரு நல்லையாவுக்கு ஏதாவது உயர்ந்த அரசியல் பதவி கிடைத்தே தீரும் என்று நம்புகிறார்கள். இந்தியாவில் இலங்கையின் உதவி ஹைக் கமிஷனராக, அல்லது இலங்கையில் வாழும் இலங்கை இந்தியரின் உண்மை நிலைமையை இந்தியப் பத்திரிகைகளுக்கு எடுத்துரைக்கும் "பிரஸ் அடாஷே"ஸ் ஆகபுதுடில்லியில் நியமனம் கிடைக்கும் என்று மேற்படி அனுதாபிகளில் ஒருசிலர் கூறித் திரிகின்றனர் வேறு சிலர் ஜப்பானுக்கு ஹைக் கமிஷனராக அனுப்பப்படவிருக்கிறார் என்று கூறுகின்றனர். திரு நல்லையாவுடன் நெருங்கிப் பழகுபவர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்ளும் வேறுசிலர், ஏதாவது ஒரு உயர் பதவி தருவதாக திரு டட்லி சேனநாயகா இன்னொரு சேனநாயகாமூலம் திரு நல்லையாவுக்கு வாக்குப் பண்ணியிருப்பதாகக் கூட சொல்லுகின்றனர்

இக்கூற்றுக்கள் அனைத்தும் வெறும் வதந்திகளாக அடிபடுகின்றனவே தவிர அரசியல் வட்டாரங்களில் இவற்றிற்கு லவலேசமும் ஆதாரம் கிடைக்கவில்லை.

இதற்கிடையில் திரு நல்லையாவிற்கு திரும்பவும் ஒரு மந்திரிப் பதவி கிடைப்பது சாத்தியமா என்பதை நாம் சிறிது ஆராய்ந்து பார்க்கலாம்

மந்திரி சபையில் தற்சமயம் 14 மந்திரிகள் இருக்கின்றனர். இவர்கள் அவ்வளவு பேரும் அப்படியே இருக்க திரு நல்லையாவிற்கு ஒரு மந்திரிப் பதவி கொடுபடுமென்றால் பதினான்கு பதினைந்தாக வேண்டும் இது அறவே சாத்தியமில்லை வகைத்தொழிலையும் கடல் தொழிலையும் பிரித்து இரண்டுக்கும் தனித்தனியாக இரண்டு மந்திரிகள் நியமிக்க வேண்டும் என்ற ஆலோசனை ஏற்கனவே இருந்து வருகிறது ஆயினும் அப்படிச் செய்தால் மந்திரிகளின் மொத்தத் தொகை அதிகரித்து விடுமே என்ற காரணத்திற்காக இந்த யோசனை நிறைவேறாமல் இருக்கிறது.

புதிய மந்திரி சபையில் பல இலாக்காக்கள் சேர்க்கப்பட்டன. ஸ்தலஸ்தாபனமும் சுகாதாரமும் தனித் தனியாகப் பிரிக்கப்பட்டன. உணவும் விவசாயமும் ஒன்றுசேர்க்கப்பட்டன ராஜாங்க மந்திரிப் பதவி கைவிடப்பட்டது இப்படியாக அதே பதினான்கு மந்திரிகளுக்கு அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில் திரு நல்லையாவிற்காக ஒரு புதிய மந்திரி ஸ்தானம் திறக்கப்படும் என்பது நடக்க முடியாததொன்று.

அடுத்தபடியாக உள்ள மந்திரி ஸ்தானங்களில் ஒன்று காலியாகக்கூடுமானால் திரு நல்லையாவுக்கு "சான்ஸ்" கிடைக்குமா என்று பார்க்கலாம்.

ஒரு மந்திரி ஸ்தானம் இப்போதுள்ள நிலையில் நான்கு காரணங்களால் காலியாகலாம்.

1 யாராவது தாமாகவே ராஜினாமாச் செய்ய வேண்டும். திரு நல்லையா செய்ததைப்போல் அவசரப்பட்டு ராஜினாமாச் செய்யக்கூடிய மந்திரிகள் யாரும் தற்போதைய மந்திரி சபையில் இருப்பதாகத் தெரியவில்லை. ஒவ்வொருவரும் அட்டையைப்போல் ஒட்டிக்கொண்டிருக்கவே பார்க்கிறார்கள். ஒரு தமிழ் மந்திரி மட்டும் "அப்படி வந்தால் ராஜினாமாச் செய்வேன்; இப்படி வந்தால் ராஜினாமாச் செய்வேன்" என்று புருடாவிடுகிறார். ஆனால் அவர் ஒருபோதும் ராஜினாமாச் செய்யப்போவதில்லையென்பதை, எவ்வளவு குத்துக்கரணங்கள் போட்டு அவர் அந்த மந்திரி பதவியைச் சம்பாதித்தார் என்ற உண்மையை அறிந்தவர்கள் அறிவார்கள்.

2. தாக்கல் செய்யப்பட்டிருக்கும் தேர்தல் மனு வழக்குகளில் யாராவது பதவிநீக்கம்செய்யப்படுதல்.

3. ஏதாவது நெருக்கடி ஏற்பட்டு மந்திரி சபை பரிபூரணமாக மாற்றி அமைக்கப்படல்.

4 யாராவது மந்திரி ஸ்தானிகராகவோ தூதுவராகவோ பிற நாடுகளுக்கு நியமனஞ் செய்யப்படுதல்.

மேலே குறிப்பிட்ட நான்காவது காரணம் நடைபெறக்கூடியது.

மேஜர் நுகவலை இங்கிலாந்தில் ஹை கமிஷனராக நியமனம் செய்யப்படவிருக்கிறார் என்று ஒரு வதந்தி அடிபடுகிறது அப்படி சம்பவித்தால் ஏற்படக்கூடிய காலி இடத்திற்கு யார் நியமிக்கப்படுவார்கள் என்பது தான் பிரச்னை.

மேஜர் நுகவலை இப்போது சுகாதார மந்திரி. காலஞ்சென்ற திரு டி எஸ். சேனநாயகாவின் மந்திரி சபையில் திரு நல்லையா சுகாதார மந்திரியின் காரியதரிசியாகக் கடமையாற்றியவர். எனவே மேஜர் நுகவலையின் இடத்தில் நியமிக்கப்பட திரு நல்லையா தகுதிவாய்ந்தவரே என்று வாதிக்கப்படலாம். ஆனால் தகுதியைப் பார்த்து பதவி வழங்கும் வழக்கம் தான் யு என் பி ஆட்சியில் மருந்துக்கும் கிடையாதே

இன்று ஆட்சிக் கட்சி யு. என் பி என்ற பெயரில் இருந்தபோதிலும் உண்மையில் இன்னும் இரண்டு குட்டிக் கட்சிகள் அதனோடு இணைந்துகொண்டிருக்கின்றன. ஒன்று தமிழ் காங்கிரஸ் மற்றது தொழிற் கட்சி.

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு பிரஜாவுரிமையைக் கைவிடவேண்டும்

## இல்லையேல் வம்சாவழிப் பிரஜையாக முடியாது

## உணவுக் கட்டுப்பாடு

### இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விற்பனையும் ஏற்றிச் செல்லுதலும்

1952, அக்டோபர் முதலாந் திகதியிலிருந்து, பர்மிட்டு இல்லாது அல்லது உணவுக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் அல்லாமல் இறக்குமதி அரிசியை விற்பனை செய்யவும் ஏற்றிச் செல்லவும் அனுமதியளிக்கப்படமாட்டாது என்று இத்தால் பொது சனங்களுக்கும், முக்கியமாக வியாபாரிகளுக்கும் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

2. கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் நியமனம் பெருத வியாபாரிகள் மீதும் மேற்கூறிய திகதியன்று அல்லது அதன் பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை விற்பவர்கள் மீதும் 1952, உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 ம் பாகத்தின் "E" தலைப்பில் 15-வது சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்படும்.

3. உணவுக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் நியமனம் பெற்ற வியாபாரிகள் இறக்குமதி செய்யப்பெற்ற அரிசியை உணவுக் கட்டுப்பாட்டு விதிகளுக்கு முரண்பாடாக விற்பனை செய்தால், அவர்கள் பேரில் 1952-ம் ஆண்டு உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3-வது பிரிவு "E" தலைப்பு 10 வது விதியின்கீழ் வழக்குத் தொடரப்படுவதோடு, அவர்கள் தமது நியமனத்தையும் இழப்பர்.

4. பெர்மிட்டின் பேரில் அல்லது கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் இறக்குமதி அரிசி ஏற்றிச் செல்வதைத் தவிர, இறக்குமதி அரிசி ஏற்றிச் செல்வதைத் தடுக்கும் ஒரு கட்டளை உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்படும். பாவனையாளர்கள் தமது பங்கீடுகளையும் (கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படும். கூடுதல் அரிசியையும்) கடையிலிருந்து வீட்டுக்கு எடுத்துச் செல்ல அனுமதியளிக்கப்படுவார்களென்று இதனால் தெளிவாகிறது. அதை விட்டு வேறிடத்திற்கு இவ்வரிசியை கொண்டுபோவதற்கு பெர்மிட் அவசியமாகும், இந்தக் கட்டளையை மறுக்கிறவர்களுக்கு வழக்குத் தொடரப்படும்.

5. அரசாங்கத்தாரால், பங்கீட்டுத் திட்டத்தின் கீழ் விநியோகிப்பதற்காக வழங்கப்படாத இறக்குமதி அரிசி எவ்வீட்டிலாவது அதிகமாக இருப்புக் கட்டப் பெற்றிருப்பின் அவ்வீட்டாரின் ஒரு மாதத் தேவைக்கு மேற்பட்ட அரிசி கைப்பற்றப்படும்.

6. இலங்கையில் விளையும் நாட்டு அரிசி தற்பொழுது எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டாதென்பதும் நாட்டரிசியை எற்றிச் செல்லுவதும், வைத்திருப்பதும், விற்பனை செய்வதும் எவ்வித தடைக்கும் உள்ளாகாதென்பதும் கவனிக்கத்தக்கது.

7. இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விற்பனை செய்யும் எல்லா வியாபாரிகளும் 1952 செப்டம்பர் 30-ந் திகதியில் தமது வசமிருக்கும் அரிசி அளவை எனக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இவ்விதக் கையிருப்பு அரிசியை பணம் கொடுத்து நான் வாங்கிக் கொள்ள ஆலோசிப்பதற்கு வசதியாகவிருக்கும் பொருட்டு இவ் விபரம் கோரப்படுகிறது. மேற்குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர், எனக்கு அறிவிக்கப்படாமல் கையிருப்பு வைத்துக் கொண்டிருக்கும் அரிசியை வியாபாரிகள் விற்க முடியாதாகையால் இத்தகைய வியாபாரிகள் மீது வழக்குத்தொடரப்படுவதோடு, கையிருப்பு அரிசி பறிமுதலாகவும் நேரலாம்.

8. உணவுக் கட்டுப்பாடு விதிகளை மீறுகிறவர்களுக்கு, ரூ. 500-00 வரை அபராதம் உட்பட 6 மாதச்சிறை வாசமும், சம்பந்தப்பட்ட உணவுப் பொருட்களைப் பறிமுதல்செய்தலும் தண்டனையாக விதிக்கப்படலாம்.

ஈ. எஸ். டி. [illegible],
உணவுக் கட்டுப்பாட்டதிகாரி.
கொழும்பு 25-8-52.

## ரஞ்சிதம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

புக்கு பொருளாதார நிலை இடங் கொடுக்காததால் அத்தோட்டத்தில் "அஸிஸ்டென்ட் கிளார்க்"காக அமர்ந்திருந்தான் சுந்தரத்தின் நண்டனுகையால் மாரிமுத்துக் கங்காணி மீது கொஞ்சம் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தான்

தனக்குப் புரியாத அந்த ஆங்கிலக் கடிதத்தைப் படித்து விஷயமென்னவென்பதை விளக்குவதற்கு மாரிமுத்துக் கங்காணி சிவபாலனைப் பிடித்தார். சிவபாலன் அதை வாசித்துப் பார்த்தபோது அது ரஞ்சிதம் சுந்தரத்துக்கு அனுப்பியுள்ள காதல் கடிதமென்று கண்டான். உண்மையைச் சொன்னால் தனது பால்ய நண்டன் சுந்தரத்தை ஆபத்தில் மாட்டி வைப்பதாகுமென்றெண்ணி சுந்தரம் படித்த சர்வகலாசாலைப் புரொபஸர் ஒருவர் அக்கடிதம் எழுதியிருக்கிருரென்று கூறிவிட்டு அதனை சுந்தரத்தின் விலாசத்திற்கு அனுப்பி வைப்பதற்கு தன்னிடமே கொடுத்துவிடும்படி கேட்டான். கங்காணிக்கு அதை சின்னக் கிளாக்கரிடம் கொடுக்க விருப்பமில்லை.

'விலாசத்தை மாத்திரம் மல்லிகைத் தோட்ட சின்னத்துரை என்று மாற்றிக் கொடுத்தாலே போதும் நான் டவுனுக்குப் போறேன் அப்படியே தபாலில் சேர்த்துவிடுகிறேன்" என்றார் கங்காணி

அன்று அப்புத்தளை டவுனில் சந்தை கூடும் நாள்.

வீட்டுக்கு வேண்டிய சாமான்களை வாங்குவதற்காக மாரிமுத்துக் கங்காணி மனைவியிடம் விடைபெற்றுக்கொண்டு மாலை மூன்று மணிக்கெல்லாம் கிளம்பி விட்டார்.

மீன் கடைப்பக்கமாகவந்துகொண்டிருக்கையில் சாலையோரத்தில் ஒருத்தி கோழிக்கூட்டு வாழைப் பழம் வைத்து விற்றுக் கொண்டிருந்தாள் மஞ்சள் நிறமுள்ள உருண்டு திரண்ட அப்பழங்களின் வனப்பில் சொக்கிப்போய் எதிரில் வருபவர்களைக் கவனியாது வந்துகொண்டிருந்த கங்காணிமீது ஒரு முரட்டுச் சிங்களவன் வந்து மோதினான். கங்காணி தலையிலிருந்த மூட்டையை நழுவவிழாமல் இறுக்கிப் பிடித்துக்கொண்டு தன் மீது மோதிய ஆசாமியிடம் மன்னிப்புக் கோரும் பாவனையில் பல்லைக்காட்டினார். "அடே பண்டி! உனக்கு கண்தெரியவில்லையா? மாடு மாதிரி வந்து விழுறியே" என்று அந்த முரட்டு ஆசாமி கங்காணியைத் திட்டிக்கொண்டே சாரத்தை ஒரு கையால் தூக்கிப் பிடித்துக் கொண்டு நடையைக் கட்டினான்.

அந்த சி. புள்ளி தன்னை அவ்வளவில் விட்டானே என்று கங்காணியார் சந்தோஷப்பட்டுக்கொண்டு தடால் ஆபீஸ் பக்கமாக வந்துகொண்டிருந்தார். அங்கிருந்த தபால் பெட்டி எதிரிலிருந்த தேனீர்க் கடையில் எரிந்துகொண்டிருந்த "பெட்ரோமாக்ஸ்" லாம்பின் ஒளியில் செக்கச் செவேலென்று காட்சியளித்தது அதைப் பார்த்ததும் கங்காணிக்கு மகனின் கடிதம் ஞாபகத்துக்கு வந்தது அதை அப்பெட்டியில் போடும் எண்ணத்துடன் கோட் பாக்கெட்டில் கையைவிட்டார். அங்கு கடிதத்தையும்காணவில்லை அந்த போட்டோவையும் காணவில்லை.

மீன் கடைப் பக்கமாக வந்துகொண்டிருக்கையில் தன்மீது மோதியவன் ஒரு "பிக்பக்கெட்" பேர்வழி அதாவது ஜேப்படி திருடன் அப்பொழுது தான் கங்காணிக்குத் தெரிந்தது. கோட்டின் உள் பாக்கெட்டைத் தட்டிப் பார்த்து, "நல்லவேளையாக மணிபேர்ஸை அபேஸ் செய்யாமல்விட்டானே!' என்று கூறித் தனது அதிர்ஷ்டத்தை வியந்து கொண்டு "அந்தச் சிறுக்கியின் படம் யாருக்கு வேண்டும்! தொலைந்ததுதான் நல்லது புரொபஸரின் சகவாசம் இனி சுந்தரத்துக்கு எதற்கு? அவன்தான் இப்பொழுது மல்லிகைத் தோட்டத்துசின்னத்துரை ஆயிட்டானே!" என்று படமும் கடிதமும் காணுமற்போனதற்கு சமாதானம் கூறிக்கொண்டு தோட்டத்தை நோக்கி எட்டி அடிவைத்தார் மாரிமுத்துக் கங்காணி.

## வெளிநாட்டு பிரஜாவுரிமை

இலங்கை வம்சாவளிப் பிரஜைகள் அயல் நாடுகளிலும் பிரஜாவுரிமை பெற்றிருந்தால் இவ்வருட இறுதிக்குள் வெளிநாட்டு பிரஜாவுரிமையைக் கைவிடவேண்டும் இல்லையேல் அவர்கள் இலங்கை பிரஜாவுரிமையை இழந்து விடுவார்கள்.

மலேயாவில் பிறந்து மலேயா பிரஜாவுரிமை பெற்று மலேயாவில் வதியும் இலங்கையர்கள் இலங்கைப் பிரஜாவுரிமை பெறவிரும்புவார்களாகில், அவர்கள் இலங்கைக்குத் திரும்பிய பின்னர் மலேயா பிரஜாவுரிமையைக் கைவிடலாம். எற்கனவே மலேயாவிலிருந்து இலங்கைக்கு வந்து இங்கு வசிக்கும் தமிழர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் தங்களின் மலேயா பிரஜாவுரிமையை ரத்துச் செய்யும்படி கோரி இலங்கையிலிருக்கும் பிரிட்டிஷ் தூதர் மூலமாக பிரிட்டிஷ் சர்க்காருக்கு மனுச்செய்துகொள்ளவேண்டும்

மைனர்கள் 22 வயது பூர்த்தியானதும் வெளிநாட்டுப் பிரஜாவுரிமையைக் கைவிட்டால் போதுமானது.

இது சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்தின் அயல்நாட்டு இலாகாவுடன் தொடர்பேற்படுத்திக் கொள்ளலாம்

தீக்குச்சி இல்லாமல் தானே பற்றிக்கொள்ளக் கூடியபுதுரக சிகரெட்டை கலிபோர்னியாவில் உள்ள ஒரு கம்பெனி கண்டு பிடித்திருக்கிறது.

## மீண்டும் திரு நல்லையா......

(8ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் காங்கிரஸின் சார்பில் ஒன்றரை மந்திரிகள் பழைய மந்திரி சபையிலும் இருந்தனர், புதிய மந்திரி சபையிலும் இருக்கின்றனர். பழைய மந்திரி சபையில் தொழிற் கட்சியின் சார்பில் ஒரு வேலையில்லா மந்திரியாக திரு குணசிங்கா இடம்பெற்றிருந்தார் ஆனால் புதிய மந்திரி சபையிலோ தொழிற் கட்சிக்குப் பிரதிநிதித்துவம் இல்லை ஆனால் தொழிற கட்சி அங்கத்தவராக திரு ஆர் ஈ. ஜயதிலகா இருக்கிருர்

தமிழ் காங்கிரஸுக்கு மந்திரிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கும்போது தொழிற் கட்சிக்கு மட்டும் ஏன் அது கொடுக்கப்படலாகாது என்று அவர் கேட்டு அடம்பிடிக்கக்கூடும்

தற்போதைய மந்திரி சபையில் இரண்டரைத் தமிழ் மந்திரிகள் இடம்பெற்றிருக்கின்றனர். இதற்குமேல் தமிழர்களுக்கு இடம் கிடைக்குமென்று எண்ணுவது பகற்கனவாகும் அத்தோடு இன்றைய சிங்கள ஒற்றையாட்சியில் உள்நாட்டு நிர்வாகம், சுகாதாரம், ஸ்தல ஸ்தாபனம் போன்ற பொறுப்புவாய்ந்த பகுதிகள் ஒருபோதும் தமிழ் மந்திரிகளின் கையில் விடப்படமாட்டா. அவற்றை எப்போதுமே சிங்களவர்களின் கையில் வைத்திருக்கவே டட்லி விரும்புவார் காலஞ்சென்ற பிரதமரும் அதையே விரும்பினர்.

திரு பண்டாரநாயகா சுகாதார ஸ்தலஸ்தாபன மந்திரிப் பதவியை விட்டு விலகியதும், அப்பதவி முறைப்படி திரு நல்லையாவைச் சேர்ந்திருக்க வேண்டும் ஆனால் அப்படி விட்டுக் கொடுக்காமல் சாகும் வரை அப்பதவியை திரு டி. எஸ் சேனநாயகாவே கட்டிக் காத்து வந்ததிலிருந்து சிங்கள ஆட்சியின் மனோபாவம் புலனாகவில்லையா? இந்த மனோபாவத்தையே திரு டட்லியும் கொண்டிருக்கிருர். பாம்பின் குட்டி பாம்பேதான். எனவே இத்தனை முட்டுக் கட்டைகளையும் தாண்டி திரும்பவும் திரு நல்லையாவுக்கு மந்திரி பதவி கிடைப்பதானால் நடவாதது நடந்துவிட்டது என்றுதான் சொல்லவேண்டும்.

'பாடும் மீன்'

சகலவிதமான

இன்ஷூரன்ஸ்

சேவைகள்

முக்கிய பிரதேசங்களிலெல்லாம் கிளைகளையும், ஏஜன்ஸிகளையும் கொண்டு சென்ட்ரல் யூனியன் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட் அனைவருக்கும் எல்லாவிதமான தேவைகளுக்கும் இன்ஷூரன்ஸ் பாதுகாப்பு அளிக்கிறது.

யாழ்ப்பாணம் வவுனியா, தெல்லிப்பழை, புத்தளம், அனுராதபுரம், திரிகோணமலை, மட்டக்களப்பு, பதுளை, ஹட்டன், மாத்தளை, பேராதனை, நாவலம்பிட்டி, மாவனல்லை, காலி, ஹக்மன, நீர்கொழும்பு, பலாங்கொடை ஆகிய இடங்களிலிருக்கும் எங்கள் காரியாலயங்களில் கலந்து ஆலோசியுங்கள்.

ஆயுள் - நெருப்பு-கப்பல்

விபத்துக்களுக்கும் வேறு அடக்கமான தேர்ட் பார்ட்டி பாலிஸிகளுக்கும், எல்லாவிதமான மோட்டார் வாகனங்களுக்கும் போனஸ் லாபம் முதலியவற்றுடன் சலுகைகள் செய்யப்படும்.

தலைமை ஆபீஸ்:

Central Union Insurance Co., Ltd.
30, UPPER CHATHAM STREET,
COLOMBO.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைத்தியமா?

[பிரெஞ்சுக் கதை]

மூலம்: மாபஸான்

தமிழில்: முகரா

எனக்குப் பைத்தியமா அல்லது பொறாமையா? எதுவென்று எனக்கே தெரியாது ஆனல் அதனல் ஏற்பட்ட வேதனை மட்டும் என்னல் சகிக்க முடியவில்லை

நான் ஒரு குற்றம் செய்துவிட்டேன்—உண்மைதான்—ஒரு பைத்தியக்காரத்தனமான குற்றம். பைத்தியம் கலந்த பொறாமை, ஆசையுள்ள காதல், வஞ்சிக்கப்படுதல், பழிகொடுத்தல், நான் பட்ட மனோவேதனை ஆகியவை ஒருவன்—உண்மையிலேயே குற்றவாளியாகாமலே—ஒரு குற்றத்தைச் செய்யப் போதுமானவைகளா?

ஓ! தொடர்ச்சியாக, கடுமையாக, பயங்கரமாக நான் துன்பப்பட்டேன் அந்தப் பெண்கிளியிடம் காதல் பைத்தியம் கொண்டேன்—ஆம், இன்னும்தான்! இது உண்மைதானு? அவள் என்னைக் காதலித்தாளா? இல்லை! இல்லை!! எனது உடலும் உயிரும் அவளுக்குச் சொந்தமாயின அன்றும் இன்றும் நான் அவளது விளையாட்டுப் பண்டம். சிரிப்பினுலும், பார்வையினுலும், அவளின் தெய்வீகமான உடலமைப்பினுலும் என்னை அடிமைப்படுத்திவிட்டாள். அவள் உடலின் வெளித்தோற்றம் என்மீது ஆதிக்கம் செலுத்துவதை எதிர்த்து நான் போராடுகிறேன். ஆனல் அந்த உடலில் அடங்கியிருக்கும் பெண்ணை நான் வெறுக்கிறேன். நிந்திக்கிறேன். திட்டுகிறேன். அவள் கற்பிழந்தவள், நயவஞ்சகி, காமாந்தகாரி, அசிங்கமான ஜந்து, நாசகாரப் பெண். சிற்றின்ப மிருகம். அவளிடம் ஆத்மா என்று ஒன்று கிடையாது. அவள் ஒரு மனித மிருகம் ஏன், அதைவிடக் கேவலமானவள். அவள் அவமானத்தின் இருப்பிடமாகிய மிருதுவான ஒரு மாமிசப் பிண்டமே தவிர வேறொன்றுமல்ல. ஆகையால் நான் அவளை வெறுக்கிறேன் நிந்தனை செய்கிறேன். திட்டுகிறேன்.

எங்கள் இணைப்பில் ஆரம்பத்தில் சில மாதங்கள் ஆனந்தமாகக் கழிந்தன. திருப்திபடுத்த முடியாத அவளது வேட்கையின் காரணமாக அவள் அணைப்பின் இன்பத்தில் நான் சோர்ந்து போனேன். அவளது விழிகள் எனது தாகத்தைத் தீர்ப்பதைப்போல பாசாங்குசெய்து என் உதடுகளைத் தன்பால் இழுத்துக்கொண்டன. அக் கண்கள் மத்தியானத்தில் சாம்பல் நிறமாயிருக்கும் அந்தி மயங்கும்போது பச்சை வர்ணம் கொடுக்கும் ஆதவன் உதிக்கும் வேளையில் நீல நிறமாக மாறிவிடும் உண்மையில் எனக்குப் பைத்தியமில்லை. அந்த நயனங்களுக்கு மூன்று வர்ணங்கள் உண்டென்று என்னல் சத்தியம் செய்யமுடியும்.

விரகதாபம் ஏற்படும் தருணத்தில் கசக்கி விட்டதைப்போல அக்கமலக்கண்கள் நீல நிறமாகிவிடும். கண்ணின் கரு விழிகள் அதிர்ச்சியுற்று அகலமாகிவிடும். உதடுகள் நடுங்கும். இளம் சிவப்பான, ஈரமுள்ள அவளது நாக்கின் நுனி பாம்பின் நாக்கைப் போல துடி துடிக்கும். அவள் தனது பாரமான கண் இமைகளை மெதுவாக உயர்த்தும்போது, ஆயாசமும், ஆசையும் நிறைந்த பார்வை அதனின்று ஒளிவீசும் அப்பார்வைதான் என்னைப் பைத்தியமாக்கி வந்தது. அவளை நான் அணைத்துகொள்ளும் போதெல்லாம் அவளது கண்களை உற்றுநோக்குவதுண்டு. அவளைச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டுமென்ற அந்த மற்ற ஆசைமட்டுமின்றி, அந்த மிருகத்தைக் கொல்லவேண்டுமென்ற எண்ணமும் என்னைப்பற்றிக் கொண்டது. அறையில் அவள் அசைந்தாடிக்கொண்டு மெதுவாக நடக்கும் போது, அவள் வைக்கும் ஒவ்வொரு அடியும் எனது இதயத்தில் எதிரொலிக்கும்.

என்னிடம் அவள் களைப்படைந்துவிட்டாளென்பதைத் தெரிந்துகொண்டேன். காலையில் அவள் தூக்கத்தினின்று விழிக்கும் போது, அவளுடைய கண்களே இந்த இரகசியத்தை என்னிடம் அம்பலப்படுத்தின. ஒவ்வொரு காலையிலும் அவள் கண்விழிக்கும் போது அவ்விழிகளை குனிந்து கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பேன் அவ்வாறு நான் செய்யும்போது, எனை அடிமைப்படுத்திய—நித்திரையில் ஆழ்ந்து கிடக்கும்—அந்த மிருகத்தின் மீது உதாசினமும், கோபமும் வெறுப்பும் எனது உள்ளத்தில் எரிமலையெனக் குமுறிக்கொண்டிருக்கும். ஆனல் வெளிறின, நிர்மலமான, அவளது கண்கள் தம் பார்வையை என் மீது பதித்ததும், அணைத்துத் தழுவிய சோர்வினுல் களைப்படைந்து வாடிப்போன அப்பார்வை எனது ஆசைகளைத் தூண்டிவிட்டு, நெருப்பைப்போல என்னைச் சுட்டெரிக்கும்

அன்று காலை அவள் கண்களைத் திறக்கும்போது உணர்ச்சியில்லாத, பற்றற்ற பார்வையைத்தான் நான் கண்டேன். அது ஒரு ஆசையில்லாத வேட்கையற்ற பார்வை. என்னிடம் களைப்படைந்துவிட்டாளென்பதை அப்பொழுது நான் தெளிவாகத் தெரிந்துகொண்டேன்; அறிந்து கொண்டேன்; புரிந்து கொண்டேன்; உணர்ந்து கொண்டேன். எல்லாம் முடிந்து விட்டதென்பது கணப்பொழுதில் என் உள்ளத்தில் பளிச்சிட்டது. நான் உணர்ந்தது சரிதான் என்பதை ஒவ்வொரு மணியும், ஏன் ஒவ்வொரு நிமிடமும் எனக்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தது. கைகளினுலும், உதடுகளினுலும், நான் ஜாடை காட்டும் போதெல்லாம் அவள் என்னிடம் ஓட்டாமல் ஒதுங்கிப் போய்விடுவாள்

“என்னை விட்டுவிடு. நீ அருவெறுப்பானவன் என்னைத் தனியே விட்டுவிட மாட்டாயா?’’ என்று அவள் அதிருப்தியுடன் துண்டு வெட்டிப் பேசுவாள்

அப்பொழுது என் மனம் கொதிப்படையும் ஒரு நாயைப்போல சந்தேகாஸ்பதமான, இரகசியமான இனம் தெரியாத ஒரு பொறாமை என்னைப் பிடித்தாட்டும் அவள் மீண்டும் உணர்ச்சி வசப்படுவாளென்பது எனக்குத் தெரியும். மற்றொருவன் அவளது காமவேட்கையைக் கிளறிவிடக் கூடுமென்பதையும் நான் அறிந்திருந்தேன். புத்தி சுவாதீனமின்றி நான் பொறாமைப்பட்டேன். ஆனல் நான் பைத்தியக்காரன் அல்ல உண்மையாகவே இல்லை! நான் காத்திருந்தேன் அவளைக் கண்காணித்துக் கொண்டிருந்தேன். அவள் எனக்குத் துரோகம் செய்யவில்லை—ஆனல் என்னை உதாசீனப் படுத்திவிட்டாள்.

“ஆண்கள் என்னை வெறுக்கிருர்கள்’’ என்று சில சமயம் அவள் வருந்துவாள். ஐயோ! அதுவும் உண்மைதான்

அவளது வெறுப்பு இரவில் அவளின் தனிமை, அசுசியான அவளுடைய நடவடிக்கைகள், களங்கமுள்ள அவளது சிந்தனைகள் முதலியவற்றை—ஏன், அவள் வாழ்வதையே—கண்டு நான் பொறாமைப் பட்டேன்.

எங்களின் ஆசை மிகுந்த இரவுகளையொட்டி ஏற்படும் சோர்வைப் பிரதிபலிக்கின்ற அதே பார்வையுடன்தான் சில சமயங்களில் அவள் எழுந்திருப்பாள். வேட்கை என்றபேய் அவள் உள்ளத்தைப் பிடித்தாட்டுவதைப் போலவும் உணர்ச்சியினுல் உந்தப்பட்டவளைப் போலவும் அவள் திடீரென்று கண் விழிப்பாள். அப்பொழுது நான் கோபத்தால் நடுங்குவேன். எனது முழங்காலால் அவளை இடித்து நொருக்கி, அவள் குரல்வளையைப் பிடித்து நெருக்கி மூச்சுவிட முடியாதபடி திக்குமுக்காடும்படி செய்து அவளுடைய இதயத்தில் ஒளிந்து கொண்டிருந்த வெட்கம் கெட்ட இரகசியங்களைக் கக்கும்படி செய்துவிட வேண்டுமென்ற தடுக்க முடியாத ஒரு ஆவல் எனக்கு ஏற்படும்.

எனக்குப் பைத்தியமா? இல்லை.

ஒரு நாள் இரவு அவள் மகிழ்ச்சியுடன் இருப்பதைக் கண்டேன். புதிய ஆசையொன்று அவளை ஆட்கொண்டுவிட்டதென்று நான் நிச்சயமாக அறிந்துகொண்டேன்; எனது அணைப்புக்குப் பிறகு வழக்கமாக அவள் எப்படி நடுங்குவாளோ அதேமாதிரி அன்றும் நடுங்கிக் கொண்டிருந்தாள் கண்களில் ஒரு புதிய பிரகாசமிருந்தது. அவள் அதிர்ச்சியடைந்திருந்தாள் என்னைப் பைத்தியமாடித்த அந்த வேட்கையின் வாடை அவள் உடல் முழுவதும் வீசிக்கொண்டிருந்தது.

நான் முட்டாளைப்போல பாசாங்கு செய்தேன். ஆனல் அவளுடைய நடவடிக்கைகளையெல்லாம் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தேன். எனினும் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒருவாரம், ஒரு மாதம், ஏன்—ஒரு வருஷம் கூட காத்திருந்தேன். ஒரு ஆச்சரியமான மனவெழுச்சியின் மகிழ்ச்சியினுல் அவளது உடல் ஊதிப் பெருத்தது. ஏதோ ஒரு அணைப்பின் ஆனந்தத்தினுல் அவள் திருப்தியடைந்திருந்தாள்.

கடைசியாக நான் ஊகித்து கொண்டேன் இல்லை, எனக்குப் பைத்தியமில்லை. நான் பைத்தியக்காரன் அல்லவென்று சத்தியம் செய்யக்கூடத் தயார். நினைத்துக்கூட பார்க்க முடியாத அந்த பயங்கர சம்பவத்தை நான் எப்படிச் சொல்லட்டும்? நான் அதை எப்படிப் புரிந்து கொள்ள முடியும்?

ஓர் இரவு அவள் நெடுந்தூரம் குதிரைச் சவாரி செய்துவிட்டுவந்து, என் எதிரே சோர்ந்துபோய் உட்கார்ந்திருந்தாள் இயற்கைக்குமாறுன ஒரு பூரிப்பு அவள் கன்னங்களில் படர்ந்திருந்தது. அவளது மார்பு விம்முவதும் அடங்குவதுமாயிருந்தது கால்கள் நடுங்கின. கண்கள் வீங்கியிருந்தன. அவளுடைய பார்வையே உண்மையைப் பட்டவர்த்தனமாக்கிவிட்டது. அவள் காதலில் சிக்குண்டிருந்தாள் எனக்குப் புத்தி தடுமாறியது அவள் மீது என் பார்வை படாமலிருப்பதற்காக ஜன்னல் பக்கம் திரும்பிக் கொண்டேன்.

வேலைக்காரன் குதிரையை லாயத்திற்குக் கொண்டு போனுன். அவள் எழுந்து, குதிரை துள்ளிக் கொண்டு போவதைப் பார்த்தாள். அந்தக் கொடிய மிருகம் பார்வையிலிருந்து மறைந்ததும், அவள் படுக்கையில் விழுந்து நித்திரா தேவியை அணைத்து கொண்டாள். நான் சிந்தித்தேன். இரவு முழுவதும் எனது சிந்தனை சிறகு கட்டிப் பறந்தது. என் உள்ளம் இரகசியங்களைத் தோண்டித் துருவிக் கண்டுபிடிப்பதற்காக அலைந்து திரிந்தது. உணர்ச்சி வசப்பட்ட ஒரு மங்கையின் விபரீதமான பிணக்கையும், விசித்திரமான சபலத்தையும் யார்தான் ஆழம்பார்க்க முடியும்? வகைதையான மனோபாவத்தினுல் அவளுடையும் திருப்தியையும், அசம்பாவிதமான சபல புத்தியையும் யார்தான் புரிந்து கொள்ள முடியும்?

(11-ம் பக்கம் பார்க்க)



எம். எல். ஏ. மோசடி

ஆசிரியர்; என். ராமரெத்தினம். கிடைக்குமிடம்: மோகன் அன் கோ லிமிட்டெட். 66¼ முதலாம் குறுக்குத்தெரு கொழும்பு விலை 8 அணு.

பெரிய இடத்து விவகாரங்கள் சந்திக்கு வருவது மிகக் குறைவு அந்தஸ்து என்ற போர்வையினுல் அவர்களுடைய மோசடிகள் மூடி மறைக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன. இருந்தும் என்றோ ஒருநாள் அவர்களுடைய குட்டுக்கள் எல்லாம் அம்பலமாகி சமூகத்தில் தலைகாட்டவும் முடியாதவர்களாகிவிடுகிருர்கள். அவர்களில் ஒருவர் கஜபதி நாயக்கர். மக்கள் சபையில் ஒரு அங்கத்தவர். மதிப்பும் கௌரவமும் வாய்ந்தவர். ஆனல் மனத்தில்......? மதுவிலக்கு சட்டமாகக்கப்பட்டு அமுல்நடத்தப்படும் ஆட்சியிலுள்ள எம். எல். ஏ. கஜபதி நாயக்கர் மது விற்பனையில் சூராய் இருக்கிருர். சட்டத்தை செய்தவர்களே சட்டத்தை மீறுகிருர்கள் அதற்கு கஜபதி நாயக்கர் சரியாண உதாரணம். கடைசியில இன்ஸ்பெக்டர் மோகனின் தந்திரத்தினுல் கஜபதி நாயக்கரின மோசடிகள் வெளிப்படுகின்றன துப்பறியும் பாதையில் எழுதப் பட்டபோதிலும் இது ஒரு கற்பனைக் கதையென்று சொல்ல முடியாது. நடக்கக்கூடிய-நடந்துகொண்டிருக்கக்கூடிய நிஜக்கதை. ஆனல பாத்திரங்களின் பெயர்கள் மட்டுமே கற்பனை. அட்டை ஆர்ட் காகிதத்தில் மூவர்ணத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது.

## திருநபிவாக்கியங்கள்

ஆசிரியர்: எம். கே. எம். மன்சூர் ஆலிம் சாஹிபு கிடைக்குமிடம்: 186 மாளிகாவத்தை ரோட் கொழும்பு விலை சதம் 25

திருநபி நாயகம் (ஸல்) அவர்களின் வாக்கியங்களின் தொகுப்பு. ஒவ்வொரு முஸ்லிம்கள் வீட்டிலும் இருக்க வேண்டிய புஸ்தகம். மத சம்பந்தமான அனுஷ்டானங்களைத் தெரிந்து அதன்படி நடக்க முற்படுவோர்க்கு நல்ல வழிகாட்டி.

—எஸ். ஆர்.

## தமிழ் அமுதம்

ஆசிரியர்: எம். ஏ எஸ். யாசீன் கிடைக்குமிடம்: தமிழ்ச் சங்கத்தார், அர்ச். மரியாயின் கல்லூரி, நீர் கொழும்பு. விலை சதம் 15.

மாணவர்களின் மாதாந்தர வெளியீடு. புத்தகரூபத்தில் கவர்ச்சியாக அச்சிடப்பட்டிருக்கிறது கட்டுரைகள் சிறுகதைகள் இடம் பெற்றிருக்கின்றன. தமிழ் மாணவர்கள் வாசிக்க வேண்டிய சஞ்சிகை. ஆ.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுந்தசேனை தொழிலாளர் தலைவருக்கு நான்கு மாதம் கடுங்காவல் தண்டனை

## அத்துமீறிப் பிரவேசித்ததாக குற்றச்சாட்டு

நமுனுக்கொல்லைப் பகுதியிலுள்ள கந்தசேனை தோட்டத் தொழிலாளர்கள் 58 பேர்களுக்கு தோட்ட நிர்வாகம் பல குற்றச்சாட்டுகளின் பேரில் ஒரு மாத நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருந்ததும், பின்னர் திடீரென அத்துமீறி பிரவேசித்ததாக அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருந்ததும் நமது 'மலைநாடு' வாசக நேயர்கள் அறிந்ததே.

தொழிலாளர் அத்துமீறி பிரவேசித்ததாக குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கடந்த 21-8-52ல் பதுளை கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தோட்டக் கமிட்டித் தலைவர் திரு சின்னையா குற்றவாளியாகக் கருதப்பட்டு நான்கு மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். இத்தண்டனையை ஆட்சேபித்து திரு சின்னையா அப்பீல் செய்ய விரும்பியதால் அவர் ரூ. 500-00 பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

அந்தத் தோட்டத் தகராறை சமரசமாகத் தீர்த்து வைக்க இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தோட்ட நிர்வாகத்துடன் எடுத்துக்கொண்ட எல்லா முயற்சிகளும் தோல்வியடைந்த போதிலும், தொழில் இலாகா இந்த தகராறை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட விசாரணை அதிகாரி இன்னும் தமது விசாரணையை ஆரம்பிக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### தொழிலாளர் வெற்றி

பதுளைமலையைச் சேர்ந்த மெதகெதர தோட்டத் தொழிலாளர்கள் தொழிற்சங்க உரிமைக்காகவும், கூட்டம் கூடும் உரிமைக்காகவும் பல வருடகாலம் போராடிவந்தனர். தொழிலாளர்களின் நியாயமான இந்த உரிமைகளை தோட்ட நிர்வாகம் சிறிதும் விட்டுக்கொடுப்பதாயில்லை. ஆனால் தொழிலாளர்களின் இடைவிடாத போராட்டத்தின் பயனாக, சமீபத்தில் இலங்கை தோட்டத்துரைமார் சம்மேளனத்துக்கும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்குமிடையே தொழில் கமிஷனர் காரியாலயத்தில் நடைபெற்ற ஒரு மகாநாட்டில் பிரஸ்தாப இரு உரிமைகளையும் வழங்குவதாக தோட்ட நிர்வாகம் ஒப்புக்கொண்டது.

### சமரசமான முடிவு

பலாங்கொடை பகுதியிலுள்ள தொழிலாளர்களுக்கும், தோட்டத் துரைக்குமிடையே பல காலமாக வுள்ள மனக்கசப்பின் காரணமாக பல தகராறுகளுக்கு இடமளித்துக் கொண்டிருந்தது. மனக்கசப்புக் காரணமான எல்லா தகராறுகளையுமொட்டி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிக்கும் தோட்டத் துரைக்குமிடையே ஒரு உத்தியோகபூர்வமற்ற மகாநாடு சமீபத்தில் பலாங்கொடையில் நடைபெற்றது.

மகாநாட்டில் பேச்சுவார்த்தைகள் மிக சௌஜன்யமாக நடைபெற்றதோடு, பல நாட்களாக ஒதுக்கப்பட்டுள்ள எல்லா தகராறுகளையும் சமரசமான முடிவுக்கு கொண்டுவந்திருப்பதாக தெரியவருகிறது.

### அந்தோனி மலையில் சுதந்திர தினம்

கண்டியைச் சேர்ந்த சின்ன அந்தோனிமலை தோட்டம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் கடந்த 15-8-52ல் இங்குள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் இந்திய சுதந்திர தினம் தலைவர் திரு ஆ. முத்துக்கருப்பன் தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

அவ்வமயம் கண்டி ஜில்லா இலங்கை இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கௌரவ காரியதரிசி திரு நா. க. பெரியசாமி மூவர்ண கொடியை ஏற்றிவைத்து இந்திய சுதந்திரத்தின் மகத்துவத்தைப்பற்றி சொற்பொழிவாற்றினர்.

கூட்டத்திற்கு மூன்று டிவிஷன்களிலுமுள்ள தொழிலாளர்கள் திரளாக விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### கெங்காதனையில் தேர்தல் கூட்டம்

பதுளை ஜில்லாவைச் சேர்ந்த கெங்காதனை தோட்டத்தில் பதுளை இ. இ. கா. ஜில்லா கமிட்டித் தலைவர் திரு எஸ். எம். சுப்பையா தலைமையில் தேர்தல் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொழிலாளர்கள் பெரிய கங்காணிமார்கள், கணக்கப்பிள்ளைமார்கள், உத்தியோகஸ்தர்கள் உட்பட தோட்டத் துரையும் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது.

செல்வி ஆர். வள்ளியம்மையின் தேசியக் கீதத்துடன் மூவர்ணகொடி ஏற்றி வைக்கப்பட்டது.

பதுளை ஜில்லா பொதுக் காரியதரிசி திரு ஏ. கே. கந்தசாமி, திருவாளர்கள் வி. எம். மூத்தையாபிள்ளை, எஸ். என். குழந்தைவேல், ராமசாமிப்பிள்ளை, தங்கவேல், மருதமுத்து ஆகியவர்கள் பேசினார்கள்.

பின்னர் நடப்பு வருட உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

### கிரகலேயில் சுதந்திர தினம்

குருவிற்றையைச் சேர்ந்த கிரகலே தோட்டத்தில் இந்திய சுதந்திர தினம் தோட்டக் கமிட்டித் தலைவர் திரு பி. எஸ். ஏ. ஜஸ்டின் தலைமையில் கொண்டாடப்பட்டது. திரு வீரன் கங்காணி மூவர்ண கொடியை ஏற்றி வைத்தார். தோட்ட பாடசாலை ஆசிரியர் திரு தம்பிராஜா, காரியதரிசி திரு முருகையா, மாதர் சங்கத் தலைவி திருமதி சந்தனம் ஆகியவர்கள் சுதந்திரப் போராட்டத்தின் சாதனைகளை தெளிவாக எடுத்துக் கூறினர்கள்.




### லெஜர்வத்தையில் வரவேற்பு

பதுளை ஜில்லாவைச் சேர்ந்த லெஜர்வத்தை தோட்டத் தொழிலாளர்கள் இங்குள்ள கதிரேசன் கோவில் மைதானத்தில் ஜில்லா தலைவர் திரு எஸ். எம். சுப்பையாவுக்கும் ஜில்லா பொதுக் காரியதரிசி திரு ஏ. கே. கந்தசாமிக்கும் ஒரு பொது வரவேற்பு அளித்தனர்.

திரு ஏ. கே. கந்தசாமி பேசுகையில் தோட்டத் தொழிலாளர்கள் கட்டுப்பாடாக இருந்து போராடினால் இறுதி லட்சியத்தை அடையலாமென்று கூறினர். பின்னர் தோட்டக் கமிட்டிக்கு நடப்பு வருட உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

### வாட்கொல்லையில் வருடாந்த கூட்டம்

பன்வில பகுதியிலுள்ள வாட்கொல்லை தோட்டம் மேல் கணக்கில் இ. இ. கா. வருடாந்த கூட்டம் ஜில்லா தலைவர் திரு வி. ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

ஜில்லா இணைக்காரியதரிசி திரு எம். ஏ. சுப்பையா மூவர்ண கொடியை ஏற்றி வைத்தார். இணைக் காரியதரிசிகளில் ஒருவரான திரு பெருமாள் பேசுகையில் சத்தியாகிரக போராட்டத்தில் ஒவ்வொரு தொழிலாளரும் பங்குபற்ற வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

பின்னர் தோட்டக்கமிட்டிக்கு நடப்பு வருட உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

### அப்புத்தளையில் மாரியம்மன் விழா

அப்புத்தளை தோட்டத்தில் கடந்த 14-ம் திகதி ஸ்ரீ மாரியம்மன் உற்சவம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும் இ. இ. கா. தோட்டக்கமிட்டி ஏற்பாடு செய்திருந்தது.

சென்ற சில வருடங்களாக இத்தோட்டத்திலுள்ள தொழிலாளர்களுக்கிடையே பல தகராறுகள் தோன்றியிருந்ததினால் இவ்விழா ஒத்திவைக்கப்பட்டிருந்தது. ஆனால் இவ்வருடம் மேற்படி தகராறுகள் யாவும் தீர்க்கப்பட்டதினால் விழா மிக உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது.

தொழில் அதிபர் திரு டி. பாலசிங்கம், ஜில்லா பிரதிநிதி திரு எஸ். மாரியப்பா, திரு எம். எஸ். நாராயணசாமி ஆகியவர்கள் விழாவுக்கு விஜயம் செய்து தொழிலாளர்களை உற்சாகப் படுத்தினர்.

### பன்விலையில் பொதுக் கூட்டம்

பன்வில டவுன் மார்க்கெட் மைதானத்தில் இ. இ. கா. ஜில்லா கமிட்டித் தலைவர் திரு வி. ராதாகிருஷ்ணன் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. திரு எஸ். தொண்டமான் தேசியக் கொடியை ஏற்றிவைத்து ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர்.

முன்னாள் தலைவர்கள் திரு கே. கோபாலாச்சாரி, திரு ஏ. ஏ. குப்புசாமி ஆகியோர்களும் கூட்டத்தில் பேசினார்கள்.

### கட்டுக் கொல்லையில் பொதுக்கூட்டம்

தலவாக் கொல்லையைச் சேர்ந்த சின்ன கட்டுக்கொல்லை தோட்டத்தில் இ. இ. கா. தோட்டக் கமிட்டியின் சார்பாக நடந்த ஒரு பொதுக் கூட்டத்திற்கு திரு என். நல்லு கங்காணி தலைமை வகித்தார்.

தோட்டக் கமிட்டி காரியதரிசி திரு மாரிக் கங்காணி பேசுகையில் ஒவ்வொரு தொழிலாளரும் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கட்டாயம் பங்குபற்ற வேண்டுமென கேட்டுக்

# பைத்தியமா?

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு நாளும் சூரியோதயத்தில் வயல்களிலும், காடுகளிலும், பள்ளத் தாக்குகளிலும் குதிரைச் சவாரி செய்யக் கிளம்பிவிடுவாள். ஒவ்வொரு தடவையும் காதல் விளையாட்டில் களைப்படைந்து போனவளைப் போன்று சோர்வுடன்தான் வீட்டுக்குத் திரும்புவாள்.

கடைசியாக நான் விஷயத்தைப் புரிந்து கொண்டேன் நான் பொறாமைப்பட்ட அந்தக் குதிரை, அவள் வனத்தைத் தழுவிய தென்றல், காய்ந்து சருகான இலைகள், மரக்கிளைகளினூடே பாய்ந்து அவளுடைய நெற்றியை முத்தமிடும் சூரிய கிரணங்கள், அவளது தொடைகளின் அணைப்பை அனுபவித்துக் கொண்டே அவளைத் தாங்கிச் சென்ற (குதிரைச்) சேணம்—ஆகியவை அவளை ஆனந்தக் கடலில் ஆழ்த்தின. அவள் திருப்தியடைந்து சோர்ந்து போன பின்னர், அவளை என்னிடம் திரும்பக் கொண்டு வந்து சேர்த்தவையும் அவைகள்தான்.

நான் வஞ்சம் தீர்க்கத் தீர்மானித்துவிட்டேன். மிகவும் ஜாக்கிரதையாகவும் நடந்துகொண்டேன். அவள் திரும்பி வரும்போதெல்லாம் நான்தான் அவளை குதிரையிலிருந்து தூக்கி விடுவேன். குதிரை பாயும். அவள் அதைக் கழுத்தில் தட்டிக் கொடுத்தது, அதன் நடுங்கும் நாசித் துவாரங்களை முத்தமிடுவாள். படுக்கையினின்று எழுந்திருந்ததைப் போல சூடேறிப்போன அவளது உடலின் நறுமணம் குதிரையின் துர்நாற்றமுள்ள மிருகவாசனையுடன் கலந்து என் மூக்கைத் துளைக்கும்.

நான் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தேன். தினந்தோறும் காலை வேளையில் ஒரே காட்டுப் பாதையில் சவாரி செய்வதுதான் அவள் வழக்கம். ஒருநாள் விடியுமுன்பே நான் எழுந்திருந்து ஒரு கயிற்றைக் கையில் எடுத்துக் கொண்டேன். யாருடனோ சண்டை செய்யப் போவதைப்போல, கைத் துப்பாக்கியை எடுத்து சட்டையில் மறைத்து வைத்துக் கொண்டேன். அவள் வழக்கமாக சவாரி செய்துவந்த பாதையை நோக்கி ஒரே ஓட்டமாக ஓடினேன். அப்பாதைக்குக் குறுக்கே கயிற்றை இழுத்து, இரு பக்கங்களிலுமுள்ள இரண்டு மரங்களில் கட்டிவிட்டு, புதரில் மறைந்து கொண்டேன்.

வெகுதூரத்தில் குதிரை பாய்ந்துவரும் காலடிச் சப்தம் கேட்டது... தூரத்திலிருந்த மரங்களினூடே அவள் வேகத்தில் வருவதைக்கண்டேன். அவளது கன்னங்கள் சிவந்திருந்தன. கண்களில் பைத்தியக் காரத்தனமான பார்வை குடிகொண்டிருந்தது. அவள் உள்ளம் பரவசமடைந்திருந்ததாகத் தெரிந்தது. அது வேறொரு திசையில் தாவிக் களிப்புற்றிருந்தது. நான் எண்ணியது சரிதான். வேகமான சவாரி அவளுக்கு மயிர்ச்சிலிர்க்கும் தனியொரு ஆனந்தத்தைக் கொடுத்ததென்பது உண்மையே.

குதிரையின் முன்னங் கால்கள் கயிற்றில் தடுக்கியதால், அது தலைகுப்புறக் கீழ் விழுந்தது. ஒரு எருதைக்கூடத் தூக்கக் கூடிய பலசாலியான நான் ஒரே பாய்ச்சலில் பாய்ந்து அவளை என் கைகளினால் தாங்கிப் பிடித்துக் கொண்டேன். பின்னர், எங்களையே பார்த்துக் கொண்டிருந்த குதிரையின் பக்கத்தில் சென்றேன். அது மறுபடியும் என்னைக் கடிக்க முயற்சி செய்வதைக்கண்டு, என் கைத் துப்பாக்கியை அதன் காதில் வைத்துச் சுட்டேன்.

அவள் என் பக்கம் திரும்பினாள். கையிலிருந்த குதிரைச் சவுக்கினால் என் முகத்தில் ஓங்கி இரண்டு அடி கொடுத்தாள். அவ்வடிகள் என்னைக் கீழே வீழ்த்தி விட்டன. மீண்டும் தாக்குவதற்காக அவள் என்மீது பாய்ந்தபோது, அவளையும் நான் சுட்டு வீழ்த்தினேன்.

நீங்களே சொல்லுங்கள்!

நக்ஷத்திரக் காதல்!


# மகாலிங்கம் வரலெட்சுமி

(ஏ. எம். மீரான்)


நமது தமிழ் நக்ஷத்திரங்கள் இருக்கிறார்களே இவர்களின் காதலே தனி! நக்ஷத்திரங்களின் வாழ்க்கையே அப்படியென்றால் அவர்களின் காதலைப் பற்றிக் கேட்கவாவேண்டும். மீளாத் தூக்கத்திலிருக்கும் ஒரு நக்ஷத்திரத்துக்கு இருந்தாற்போலிருந்து 'சுக்கிர திசை' அடிக்க ஆரம்பித்துவிடும். ஒரே நேரத்தில் பல படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுவிடுவார். அதோடு அந்த நக்ஷத்திரத்தின் 'காதல்' சமாசாரமும் பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக வர்ணிக்கப்பட்டுவிடும்.

எனது இந்தக் கருத்துக்கு மிகவும் பொருத்தமாக இருப்பவர் நடிகர் மஹாலிங்கம் தான். இவர் காதல் விஷயங்களில் கொஞ்சம் தீவிர வாதி. ஆனால் சாதுர்யமாக நடந்துகொள்ளுவார்.

அப்பொழுது பிரகதியின் 'ஸ்ரீ வள்ளி' வெளி வந்து பிரமாத வெற்றியுடன் நடைபெற்றுக்கொண்டிருந்தது. மஹாலிங்கத்தின் நக்ஷத்திர சகாப்தமே வள்ளியிலிருந்துதான் ஆரம்பித்ததென்றால் மிகையல்ல. அதோடு அவர் காதல் 'நாடகங்களும்' மிக பிரமாதமாகப் பத்திரிகைகளில் விமரிசனம் செய்யப்பட்டன. சினிமா உலகமே 'மஹாலிங்கம்-குமாரி ருக்மணி காதல்' பற்றித்தான் சிந்தித்துக்கொண்டிருந்தது. இந்தச் சமயத்தில் தான் டைரக்டர் ஒய். வி. ராவ் ருக்மணியைச் சந்தித்தார். அதோடு அவர்களிருவரும் தம்பதிகளாக வேண்டிய அளவுக்கு அவர்களின் காதல் முற்றிவிட்டது. மஹாலிங்கம் இது பற்றி 'மூச்சுப்பேச்சு' காட்டவில்லை.



டி. ஆர். மகாலிங்கம்




மகாலிங்கம் ராஜம்மா

அடுத்து இரண்டு மூன்று படங்களில் எம். வி. ராஜம்மாவுடன் நடித்தார். இது பற்றியும் பல கதைகள் கட்டி விடப்பட்டன.

தொடர்ந்து பல படங்களில் நடித்ததும் மஹாலிங்கம் சொந்தமாகப் படம் தயாரிக்க ஆரம்பித்தார். முதல் படமான மச்சரேகையில் தன்னுடன் அஞ்சலிதேவியை நடிக்க ஒப்பந்தம் செய்தார். படம் பாதி முடிவதற்குள் அஞ்சலியைப்பற்றிப் பிரமாதமாக விளம்பரம் செய்யப்பட்டது. பல 'போஸ்'களில் அஞ்சலியின் படம், பல பத்திரிகைகளில் வெளிவந்தது. அஞ்சலியின் நடிப்பை ஷூட்டிங்கிலேயே பார்த்தவர்களெல்லோரும் மிக மிகப் புகழ்ந்தனர். மஹாலிங்கத்தின் பாகத்துக்கு ஏற்ற சரியான கதாநாயகி அஞ்சலிதான் என்று சொல்லிவிட்டனர். மச்சரேகையில் மட்டுமல்ல இனி இவர்கள் இருவரும் சேர்ந்துதான் நடிப்பார்களென்று ஆரூடம் சொல்லிவிட்டனர்!

இவ்வளவெல்லாம் ஆன பிறகு யாருமே எதிர்பார்க்காத ஒரு செய்தி திடீரென்று கிடைத்தது. இந்த திடீர்ச் செய்தி எல்லோரையும் ஒரே ஆச்சரியத்திலாழ்த்திவிட்டது. அது பற்றிய விளக்கமான செய்தி கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது. இருந்தாலும் இவ்விஷயத்தில் சற்று தீவிரமாகவே இறங்கினேன்—செய்தி என்னவென்றறிய.

சம்பந்தப்பட்ட ஒருவரை விசாரித்தேன். "என்னமோ சார்! மஹாலிங்கம் அஞ்சலியை மச்சரேகையிலிருந்து நீக்கிவிட்டார். இதுவரை நடித்த மச்சரேகைக்கான பூராக காட்சிகளையும் கொளுத்திவிட்டார்" என்று மட்டுமே சொன்னார். இதற்குமேல் அவரிடமிருந்து, அவரை விட்டு விட்டு இன்னும் நெருங்கியவர்களை விசாரித்தேன். அதில் ஒரு சிலர் சொன்னது ஒரு சினிமாப் பத்திரிகை 'நுணுக்கமே' செய்திருப்பதுபோல் சாயாக இருந்தது... அதனுடைதான நடந்த... அடிக்கடி அஞ்சலி மஹாலிங்கத்தை...




விடுவாராம். சிறிது நாட்களில் மஹாலிங்கம் தான நடிக்க வேண்டிய படங்களின் ஷூட்டிங்கிற்காக—அஞ்சலிக்கும் அப்படங்களுக்கும் சம்பந்தமேயிருக்காது—சென்றால் அங்கும்கூடவே செல்வாராம். ஆக மஹாலிங்கத்தை விட்டுப் பிரிய அவர் சிறிது விரும்பவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்துவிட்டது.

மேலும் சிறிது நாட்களாயின. மஹாலிங்கத்தின் சொந்த ஸ்தாபனமான ஸ்ரீ சுகுமார் புரொடக்ஷனில் தானும் ஒரு பங்குதாரராகச் சேரவிரும்புவதாக அஞ்சலி மஹாலிங்கத்திடம் தெரிவித்தாராம். அஞ்சலியின் இந்தக் கடைசி முயற்சி மஹாலிங்கத்துக்குக் கோபத்தை மூட்டிவிட்டது. மச்சரேகையிலிருந்து அஞ்சலியை நீக்கினார். அதோடு அவர் மச்சரேகைக்காக நடித்த படங்களையும் தீக்கிரையாக்கிவிட்டார். அதோடு அவர்கள் உறவே அறுந்துவிட்டது. அஞ்சலிதேவி பொருளாலேயோ பங்குதாரராகச் சேர விருப்பம் தெரிவித்திருக்கமாட்டார். ஏனென்றால் பல தடவை மேல் புரளுபவராயிற்றே எல்லாம் நக்ஷத்திரக் காதலால்வரும் வினைதான். பங்குதாரராக இருந்தால் மஹாலிங்கத்தை அடிக்கடி சந்திக்க முடியும். யாருக்குச் சந்தேகமும் இருக்காது என்ற எண்ணத்தில் பங்குதாரராக முனைந்தார்போலிருக்கிறது.



அஞ்சலிதேவி

அஞ்சலி சென்றுவிட்டதால் காலியான அந்த இடத்திற்கு வரலக்ஷ்மி வந்தார். மஹாலிங்கம் தமது காதல் விவகாரங்களை வெளிப்படையாகக் காட்டிக்கொண்டுவருகிறார்—இந்த வரலக்ஷ்மி வந்த பிறகு வரலக்ஷ்மியும் அப்படித்தான். அவர் யாருக்கும் பயப்படாதவர்.

மஹாலிங்கம் தன் படத்திலிருந்து அஞ்சலியை எவ்விதம் நீக்கினாரோ, அதே போலவே ஏ. வி. எம். மும் தமது படமான ஓரவஞ்சனையில்(?) வரலக்ஷ்மி நடித்திருந்தும் அவரை நீக்கிவிட்டு படத்தையும் மாற்றிவிட்டார். சினிமா உலகமே வசித்திரமாக இருக்கிறது; இல்லையா? ஏ. வி. எம். ஸ்டுடியோவில் நடந்ததற்கு காதல் தகராறுதான் காரணம்.

அன்று ஏ. வி. எம்மின் ஒரு... ஷூட்டிங்கு... வரலக்ஷ்மி நடிக்க வேண்டியது... முதலில்...

...கப்பட்டுக்கொண்டிருந்தது. அடுத்து வரலக்ஷ்மி நடிக்க வேண்டிய கட்டம் இன்னும் ஒரு மணி நேரம் இருந்தது. வரலக்ஷ்மிக்கு 'மேக்-அப்' எல்லாம் செய்யப்பட்டுவிட்டது. என்ன தோன்றிற்றோ தெரியவில்லை, திடீரென்று ஷெட்



எஸ். வரலட்சுமி

டைவிட்டு வெளியே வந்து தமது காரில் ஏறினார். கார் அடுத்த ஸ்டுடியோ ஒன்றுக்குச் சிட்டாய்ப் பறந்து சென்றது. அந்த ஸ்டுடியோவுக்குள் வரலக்ஷ்மி சென்றதுமே எல்லோரும் 'கொல்'லென்று சிரித்துவிட்டார்களாம். ஏனென்றால் தனக்கு இடப்பட்டிருக்கும் மேக்-அப்போடு வரலக்ஷ்மி வந்திருக்கிறார். தனது நக்ஷத்திரக் காதலருடன் சிறிது நேரம் அளவளாவிவிட்டு ஏ. வி. எம். முக்குத் திரும்பினார். கார் ஸ்டுடியோ வாசலைக் கடப்பதற்குள் காவல் காக்கும் கூர்க்காவின் கம்பீரக் குரல் ஒலித்தது: "தாங்களை உள்ளே விடக்கூடாது என்று உத்தரவு" என்றான். "யார்?" என்று கோபத்தோடு கேட்டார் வரலக்ஷ்மி.


"டைரக்டர் நீலகண்டன்" என்று சொல்லியவாறே, சிறிது திறந்திருந்த கதவை நன்றாக அடைத்துவிட்டு மறுபடியும் தன் இடத்தில் வந்து நின்றான். வரலக்ஷ்மிக்கு அவமானம் தாங்கமுடியவில்லை. உடனே திரும்பிவிட்டார். காரில் செல்லும் போது அந்த அவமானத்தை நினைத்து மிகவும் வருந்தினார். 'காதல் செல்லும் பாதையெல்லாம் கண்ணீரைக் காணீர்' என்று ஒரு சினிமாவில் பாடியது அவரது காதில் வந்து ஒலித்ததோ என்னவோ! மேலும் தனது கண்ணீரை அதிகமாக வடித்து ஒரு மாதிரியாக வீடு வந்து சேர்ந்தார். மஹாலிங்கத்துக்கும் இவ்விஷயம் எட்டாமலில்லை. ஆனால் இதைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. ஏனென்றால் மஹாலிங்கம் இவ்வளவு முனைந்ததற்குக் காரணம் ஏ. வி. எம். தானே.


லக்சால்
சொறி, சிரங்கு, கரப்பான் முதலிய சகல சர்ம வியாதிகளையும் குணப்படுத்துகிறது.



மர அரிவுக்கு வேண்டிய
சக்கர வாள்கள்

ஏராளமானவை வந்திருக்கின்றன



கீழ்க்காணும் சைஸுகள் கைவசம் இருக்கின்றன உங்கள் தேவைக்கு ஆடர் செய்யுங்கள்

| | | | |
|---|---|---|---|
| 6'1"19 | கேஜ் | 18"1½"14 | கேஜ் |
| 8"¾"18 | ,, | 20"1½ 14 | ,, |
| 10'1 17 | ,, | 24"1½"12 | ,, |
| 12'1'16 | ,, | 30 1½ 12 | ,, |
| 14 1 16 | ,, | 36"1½ 11 | ,, |
| 18 1 14 | ,, | 46 2 9 | ,, |

ஜெபன் மேக சக்கர வாள்கள்.........


| | |
|---|---|
| 42'2'10 | கேஜ் |
| 48'2" 9 | ,, |
| 54 2" 8 | |
| 60'2" 7½ | ,, |

விலைகளும் மற்றும் விபரங்களும் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

சாமுவேல், சன்ஸ் அண் கம்பெனி லிமிடெட்,
371, பழைய சோனக தெரு, கொழும்பு.
தபால் பெட்டி நீர் 46. டெலிபோன்: 2841


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மகத்தான ஆருவது வாரம்!



## சென்ட்ரல் (கொழும்பு)

காலை 10-மணி பிற்பகல் 2-30 மணி மாலை 6 மணி இரவு 9-30 மணிக்கு, நாளை பிற்பகல் 2-30 க்கு மெட்னி காக்ஷி.



## மினெர்வா (கிராண்ட்பாஸ)

காலை 10-15 மணி பிற்பகல் 2-30 மணி மாலை 6-30 மணி இரவு 9-30 மணிக்கும் நாளைமுதல் 6-30 க்கும் 9-30 க்கும்

பானுமதி-நாகேஸ்வரராவ்-கிருஷ்ணமூர்த்தி நடிக்கும்

# ★ காதல் ★

## மகேந்திரா (யாழ்ப்பாணம்)

(போன்: 184)


இன்று, காலை 10-30 மணி மாலை 6-15 மணி இரவு 9-30 மணிக்கும், நாளைமுதல் மாலை 6-15 இரவு 9-30 மணிக்கும்



குற்றவாளி பிறப்பதில்லை சமுகம் அவனைச் சிருஷ்டிக்கிறது என்ற சித்தாந்தத்தை அடிப்படையாகக்கொண்ட சித்திரம்

(ஆர். கே. பிலிம்ஸ் தயாரிப்பு)

ராஜ்கபூர் ★ நர்க்கீஸ ★ பிருதிவிராஜ்
குக்கூ ★ கே.என்.சிங ★ லீலாசிட்னிஸ
முதலியோர் நடிக்கும்



இலவசபாஸ்கள் செல்லுபடியாகாது.

# அவாரா

## முருகன் தியேட்டர் (ஜிந்துப்பிட்டி)

### வெற்றிகரமான 13-வது வாரம்

உள்ளத்தைக் கொள்ளைகொண்டு உணர்ச்சியைச் சோதனை செய்கிறாள் என் தங்கை

எம். ஜி. ராமச்சந்திரன் பி. எஸ். கோவிந்தன்
மாதுரிதேவி, வி. சுசீலா முதலியோர் நடிக்கும்

# என் தங்கை




அத்துடன்

ஜிப்ஸி நடனம், நாடோடி நடனம், பரத நாட்டியம் முதலியவற்றை ஆடிக்காட்டி ரசிகர்களை மகிழ்விக்க நேரில் தோன்றுகிறார்கள் பிரபல நடனமணிகள்.

ராஜேஸ்வரி லலிதா கோஷ்டியாரும்
இசைவாணி சரோஜினி தேவியும

அளிக்கும் இணையற்ற கலை விருந்தை பருகத் தவறாதீர்கள்.

நேரம் ஞாயிறு பிற்பகல் 1-00 மணி மாலை 5-30 மணி இரவு 9-30 மணி
1-ம் திகதி பிற்பகல் 1-00 மணிக்கு (ஹஜ்ஜு பெருநாளை முன்னிட்டு) 2-ந்திகதி முதல் தினசரி மாலை 5 மணி இரவு 9-30 மணி.

டிக்கட் விபரம்: கலரி 1-10, 2-ம் வகுப்பு 2-25, மற்ற வகுப்புகள் முன் உள்ளபடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேம்ஸ்வாட்: நீராவி என்ஜினின் தந்தை

## கடும் உழைப்பும், பொறுமையும் வெற்றிக்கு காரணம்

[யுனு லாஸ்காட்]

சிறு பையன்களிடம்—சில சிறு பெண்களையும் சேர்த்துக்கொள்ளலாம்—விளையாட்டு சாமான்கள் கொடுத்தால் போதும் அவற்றுடன் கொஞ்ச நேரம் விளையாடிவிட்டு பிறகு அவற்றை உடைக்க ஆரம்பித்துவிடுவார்கள். ஆனால் ஜேம்ஸ் வாட் இருக்கிறாரே அவர் ஆறு ஏழு வயது சிறு பையனாக இருக்கும்போது தனது விளையாட்டுச் சாமான்களை அக்குவேறு ஆணி வேறாக பிரித்து மறுபடியும் அவற்றை முன்போலவே அமைத்து சுற்றியிருப்போரை அதிசயித்திலாழ்த்துவாராம் சில சமயத்தில் அவற்றிலிருந்து புதிய விளையாட்டுச் சாமான்கள் கூட பண்ணிவிடுவாராம்! கிரீனக் என்ற ஸ்காட்லாந்து கிராமத்தில் 1736-ம் வருடத்தில் ஜேம்ஸ் பிறந்தார். தனது கெட்டிக்காரப் பிள்ளைக்கு சாமான்கள் செய்யும் கருவிகள் செட்டொன்றை ஜேம்ஸின் தந்தை வாங்கித் தந்தார். ஜேம்ஸின் தந்தை கப்பல் கட்டுபவர்.

தம் வீட்டின் பின்புறத்திலிருந்த தொழிற்சாலையில் தான் ஜேம்ஸ் எப்போதும் தனது காலத்தை கழிக்கத் தொடங்கினார். கப்பல்கள், சாமான் தூக்கிகள், பம்புகள்போன்றவைகளை மாதிரி உருவங்களில் கட்டுவதில் அவருடைய ஆசை சொல்லி முடியாது அவருக்கு சிறு வயதிலிருந்து உடம்பு நோஞ்சலாக இருந்ததினால் வீட்டிலேயே அவருக்கு படிப்பும் கணிதமும் கற்றுக் கொடுக்கப்பட்டது. தான் பெரியவனான பின்பு கணித கருவிகளை தயாரிப்போனாக இருக்கவேண்டும் என்று அவர் தீர்மானித்தார் ஆனால் கடும் உழைப்பும் பொறுமையும் இவருக்கு மங்காத புகழை அளித்தன. உண்மை நீராவி என்ஜினை கண்டுபிடித்தவர் என்று இவரை உலகம் போற்றுகிறது.

பதினெட்டு வயதாகும் போது ஜேம்ஸ் வாட் கிளாஸ்கோ நகரத்திற்குப் பயிற்சிபெற சென்றார். ஆனால் அங்கு தமக்கிசைந்த வேலையை சொல்லிக்கொடுக்கும் நிபுணர் ஒருவரையும் காண முடியவில்லை. லண்டனுக்குப்போய் தன் அதிர்ஷ்டத்தை தேடும்படி ஒரு நண்பர் யோசனை கூறினார். ஆகவே ஜூன் 1755-ம் வருடத்தில் லண்டனை நோக்கி குதிரையின்மீது புறப்பட்டார் கிளாஸ்கோவிலிருந்து லண்டனுக்குச் சென்ற அந்த 12 நாள் பிரயாணத்தின்போது தான் ஒரு நாள் நீராவியின் சக்தியை இணைத்து இந்தப் பிரயாணத்தை ஒரு சில மணி நேரத்தில் முடிக்கும்படி செய்யப்போகிறோம் என்று ஜேம்ஸ் வாட் கனவிலும் நினைத்தவரில்லை

லண்டனில் தனது ஆசை திட்டத்தை மேற்கொள்ள அவரால் முடிந்தது. மீத்தளைத் திராசுகள், காம்பஸ்கள் போன்றவை பண்ண அவர் கற்றுக் கொண்டார். அவருடைய வேலைத்திறமையைக்கண்டு இவருடைய உபாத்தியாயர் மிக சந்தோஷமடைந்தார். ஆனால் ஜேம்ஸ் வாட் அங்கே நெடுங்காலம் தங்க இயலவில்லை. மிக அருமையாக வேலைசெய்ததனாலோ என்னவோ அவருக்கு உடல் அசௌக்கியமேற்பட்டது. அதன் காரணமாக தன் கிராமத்துக்கு திரும்பவேண்டியதாயிற்று. லண்டனில் ஒரே வருடம் தான் தங்கினார்.

கிராமத்துக்குத் திரும்பியதும் ஜேம்ஸின் ஆரோக்கியம் மீண்டும் சரியாகிவிட்டது ஆனால் அவருக்கு வேலை கிடைக்க மிக கஷ்டமாயிருந்தது சிறிது காலம் பிறகு சில நண்பர்களின் உதவியினால் கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தின் பேராசியர்களுக்கு இது மாதிரி ஜேம்ஸ் வாட் என்ற கலைஞன் ஒருவனிருக்கிறான் அவன் மேதை என்ற விஷயம் எட்டிற்று உடனே அவர்கள் அவரை வரவேற்று பல்கலைக்கழகத்தின் ஒரு தனி அறையைக் கொடுத்தனர். இங்கு அவர் தமக்குகந்த வேலையில் ஈடுபட்டார் வெகுவிரைவினில் "எது வேண்டுமானாலும் செய்யக் கூடியவர்" என்ற புகழை பெற்று விட்டார் ஜேம்ஸ் ஒரு வேலைப்பாடை செய்வதற்கு அவர் சளைக்காமல் உழைப்பதற்கும், ஆராய்வதற்கும் தயாராயிருந்தார்.

ஜேம்ஸ் சிறுவனாக இருக்கும்போது தேநீர் பாத்திரத்தின் மூடி கொதிக்கும் தண்ணீரின் ஆவியினால் மேலும் கீழும் ஆடுவதை அதிசயத்துடன் கவனிப்பார் என்ற ஒரு கதையிருக்கிறது அது நிஜமோ இல்லையோ நியூகோமென் என்ஜினை பார்த்த க்ஷணத்திலிருந்து தனது ஓய்வு நேரத்தையெல்லாம் நீராவி என்ஜினை ஓட்டுவதில்தான் கழித்தார்.

### கனவு பலித்தது

இந்த முயற்சியில் தன்னிடமிருந்த பணத்தையெல்லாம் செலவிட்டார் நல்லவேளையாக ஒரு நண்பர் உதவிக்கு வந்தார் அவர் பெயர் மாத்யூ பவுல்டன் என்பதாகும் அவர் பர்மிங்ஹாமில் ஒரு பணக்கார தயாரிப்பாளராவார் அவரும் தனது ஆலைகள் எல்லாம் நீராவி சக்தியினால் இயங்க வேண்டும் என்று கனவுகள் கண்டுவந்தார்.

அநேக ஏமாற்றங்களும் தோல்விகளும் ஏற்பட்டன ஆனால் இருவரும் மனந்தளரவில்லை கடைசியில் வெற்றி கிடைத்தது ஜேம்ஸ்வாட்டின்மீது பவுல்டன் வைத்த நம்பிக்கை வீண்போகவில்லை வாட் தயாரித்த நீராவி என்ஜின்களை தமது தொழிலாளர் [illegible] டார் இருவருடைய கனவும் பலித்தது




அன்பார்ந்த மாணவர்களே!

புதிதாக ஆரம்பித்த 'சிந்தனைச் சுழல்' பகுதிக்குக் கிடைத்த வரவேற்பு மாணவர் உலகம் தூங்கிவிடவில்லை என்பதற்கு ஓர் நல்ல எடுத்துக்காட்டு.

கிடைத்த பல கார்ட்களில் சிறந்தன சில இம்முறை பிரசுரமாகிறது.

இதே ஆர்வத்தை தொடர்ந்து காட்டுவீர்களென எதிர்பார்க்கிறேன்.

சுதந்திர மாமா

### சிந்தனைச் சுழல் 1.

**மாணவர்கள் இந் நாட்டு மன்னரானால்.....**

மாணவர் இந் நாட்டு மன்னரானால்......பழமை மறைந்து புதுமை மிளிரும் வஞ்சகம் இறந்து வாய்மை பிறக்கும் ஏழையின் கண்ணீர் ஏய்த்துப் பிழைப்பவர் இரத்தமாக மாறும். சமத்துவம் நிலைபெறும்

"மயிலடியான்"
"சாத்மீக சபை"
உன்னஸ்கிரிய.

❖

மாணவர்களாகிய நாம் இன்று எவ்வளவோ கஷ்டத்துக்கு மத்தியில் படிக்கின்றோம். இடைவிடா முயற்சியின் பயனால் நாளை பட்டத்தைப் பெற்று இந்நாட்டு மக்களின் அன்பையும், அபிமானத்தையும் பெற்று போற்றிப் புகழ்ந்து வரும் காலையில், அம்மக்களின் மனம் குளிர எம்மை ஒரு மக்கள் தொண்டனாக அதாவது தேசாபிமானியாக்கிக் கொள்கின்றோம். அப்பொழுது அவர்களது இன்னல்களை போக்கி, இன்ப துன்பங்களில் பங்கு பற்றி சளைபாது உழைக்கவே மக்கள் அபிலாசை வைத்து எம்மை இந்நாட்டு மன்னராக்கினால் கொடுங் கோலாட்சி செலுத்தாது, முன்னிருந்த ஒரு தேசாபிமானிபோல் ஏழை பணக்காரன் என்ற மனப்பான்மை கொள்ளாது நல்லாட்சி செலுத்தவேண்டும் மக்கள் மனம் கொண்டு சிறந்த சிறப்பும் பெற்று வாழ்வதே மாணவர்களாகிய நாம் இந்நாட்டு மன்னரானால் செய்யும் ஒப்பற்ற சேவை

இரா. கனகலிங்கன்,
யாழ்ப்பாண மத்திய கல்லூரி
யாழ்ப்பாணம்

❖

நாட்டில் கொலை, களவு, விபச்சாரம், பொருமை, லஞ்ச ஊழல் ஒழிய வேலையில்லாத் திண்டாட்டம் அகல, ஏழை! அடிமை!! இழிகுலம்!!! என்ற நிலை நீங்க, உழவன் குடி உயர, பாட்டாளி சமுதாயம் சிறப்புற, கல்வி கலாசாலைகள் பெருக, கைத் தொழில்-விஞ்ஞானம் விவசாயம் வைத்தியம்-பெருக, வறுமையால் வாடும் கற்றோர் கண்ணியமுடன் வாழ, நாட்டு வளம் ஓங்க நாட்டுக்கு அமைச்சர்களில் நல்லறிஞர்களைத் தேர்ந்தெடுத்து அனுபவத்தோடு மனித சமுதாயத்தில் அன்பு அஹிம்சை சாந்தம் சகோதரத்துவம் ஓங்க பாழும் பழமையில் ஊறிப்போன சமுகத்தைப் பண்படுத்தி ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற நன்மொழியை நாட்டிலே புகுத்தி எல்லோரும் சமவள நாட்டு மன்னர்களென்று வெற்றிச் சிந்து பாடி வீர முழக்கமிட்டு மக்களாட்சியை மலரச் செய்வோம்

எம். சுல்தான்
5-ம் குறிச்சி
அக்கரைபற்று.


❖

மக்களின் ஏகோபித்த அன்பால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு ஆட்சி நடத்துவோம் நாட்டு மக்கள் யாவரும் ஒன்றுபட்டு வாழவும் எல்லோரும் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கைக்கிணங்கி உயர்வு தாழ்வின்றி வாழவும் வழி வகுப்போம். நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயர சமா பொதுப் பணியிலும் சேவையிலும் ஈடுபடுவோம். மக்களின் சுபீட்சத்தில் அக்கரை காட்டுவோம் பின்னணியாயுள்ள கிராமங்களுக்கு சகல வசதிகளையும் செய்து தருவோம்

நாட்டில் உள்ள சகல பிரிவு மக்கட்கும் ஒரே வகையான சட்ட திட்டங்களியற்றி நல்லாட்சி செய்து நாட்டின் சுபீட்சத்துக்கு உழைத்திடுவோம் எதேச்சாதிகாரத்தை இன்றைய உலகிலிருந்து அறவே அகற்றிடுவோம் 'மன்னர்க்கழகு செங்கோல் முறைமை' என்ற முதுமொழியைக் காப்பாற்றுவோம் இத்தகைய மாணவர்கள் மன்னரானால் இதயப்பூர்வமான ஒத்துழைப்பை யாவரும் நல்குவர்.

செல்வி அசுமா
ஆ. பெ. பாடசாலை
புத்தளம்.

சிந்தனைச் சுழல் 2.
'நாமும் நாமும்'
கிடைக்க வேண்டிய கடைசி திகதி 10-9-52



லண்டன் நகரில் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் குழந்தைகள் படுக்கையில் இருந்துகொண்டே படங்களைப் படிக்கலாம். ஜிப்பர் என்ற நான்கு வயதுக் குழந்தை தனக்காக தாதி வரைந்துள்ள ஓர் படத்தைத் திருத்துவதைக் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

### தமிழாசிரியர் சங்கம்

ஊவா மாகாணத் தமிழாசிரியர் சங்க ஆதரவில் கல்வி வாரமும் ஆசிரியர் தினமும் பதுளை தர்மதூதக் கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு எஸ். சி. தம்பையா பண்டிதர் தலைமையில் நடைபெற்றது.

### உபதேசியாருக்கு பிரிவுபசாரம்

நிலாவெளி மெதடிஸ்த சபை உபதேசியார் திரு எஸ். ஏ. தங்கராசாவுக்கு கிராமச் சங்கத் தலைவர் திரு நா கனகசபை தலைமையில் அவ்வூர்வாசிகளால் பாடசாலை மண்டபத்தில் ஓர் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.

### வாலிபர் முன்னணி

நல்லூர் சமூக சேவா வாலிபர் முன்னணி என்ற பெயரால் ஒரு முன்னணியை நல்லூர் 8ம் வட்டார வாலிபர்களால் நிறுவப்பட்டுள்ளன

### விருந்துபசாரம்

மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலையிலிருந்து ஒரு ஆசிரிய—மாணவ கோஷ்டி சமீபத்தில் கண்டிக்கு வந்தபோது நம்புக்கல அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையால் கட்டுகாஸ்தோட்டை நியு சில்வர்டேல் ஹோட்டலில் ஒரு விருந்து அளிக்கப்பட்டது.

### ஆசிரியர் மகாநாடு

மட்டக்களப்பு உதவி ஆங்கில ஆசிரியர்களின் கூட்டமொன்று அக்கரைப்பற்று மெதடிஸ்த் 'மிஷன்' பாடசாலையில் சங்கத் தலைவர் திரு கே. கே. இரத்தினசிங்கத்தின் தலைமையில் நடைபெற்றது.

### ஆதி திராவிட மகாஜன சங்கம்

திருநெல்வேலி ஜில்லா ஆதிதிராவிட மகாஜன சங்கத்தின் பிரச்சாரப் பொதுக் கூட்டமொன்று கொள்ளுப்பிட்டி தர்மகீர்த்தியராம ரோட் 9ம் இலக்க இல்லத்தில் சங்கத் தலைவர் திரு எஸ். டி. சுடலையா தலைமையில் நடைபெற்றது.

### பகுத்தறிவு மன்றம்

கொழும்பு இளைஞர் பகுத்தறிவு மன்ற உறுப்பினர் கூட்டம் கும்பெனித் தெரு வெக்ஷால் வீதியிலுள்ள மன்ற காரியாலயத்தில் திரு மா. யோ. தேவதாசன் தலைமையில் கூடிற்று.

### இளைஞர் கழகம்

மட்டக்களப்பு இளைஞர் கழகத்தை அகில இலங்கை ஜனநாயக வாலிபர் சம்மேளனத்தின் செயலாளர் திரு இஸ்ரன்லி ஜோச்லி சமீபத்தில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்து அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். திரு குலவீரசிங்கமும் சமூகமளித்திருந்தார்.

### தோ. பா. ஆசிரியர் சங்கம்

அகில இலங்கை தோட்டப் பாடசாலை ஆசிரியர் சங்க நிர்வாக சபைக் கூட்டம் கல்லூரியில் திரு தேவசகாயம் தலைமையில் கூடிற்று.

### ஆசிரியருக்கு பிரியாவிடை

எல்பிட்டியைச் சேர்ந்த இகல்கந்தை தோட்டப் பாடசாலையில் கடமையாற்றிவந்த திரு ரா. சீனிவாசகத்திற்கு ஒரு பிரிவுபசாரக் கூட்டம் நடத்தப்பட்டது. சிற்றுண்டி வழங்கப்பட்டு குரூப்போட்டோவும் எடுக்கப்பட்டது.

### ஆசிரிய தினம்

டெனியாய அர்ச். மத்தியூ ஆங்கில பாடசாலையில் தென் மாகாண தமிழ் ஆசிரியர் சங்கத்தினரால் ஆசிரிய தினம் தலைவர் திரு டி. எஸ். கே. வனசிங்கம் தலைமையில் கொண்டாடப்பட்டது

### பால் நிலைய திறப்புவிழா

புங்குடுதீவு வல்லன் கிராம முன்னேற்றச் சங்கத்தின் அரிய முயற்சியால் வில்லனில் ஓர் இலவச பால் உணவு நிலையம் திறக்கப்பட்டிருக்கிறது.

### மிருசுவில் கிளப்

மிருசுவில் சென் நிக்கலஸ் கிளப் விளையாட்டு மைதானத்தில் 3வது வருட விளையாட்டுப் போட்டி திரு டி. எம். சுவாம் பிள்ளை தலைமையில் நடைபெற்றது

### வவுனியா ஆசிரியர் கழகம்

வவுனியா வட்டார ஆசிரியர் நினைவுறுத்தற் கழகம் வவுனியா அரசினர் ஆங்கில பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. வட மாகாண வித்தியாதிகாரி திரு கே கிருஷ்ணபிள்ளை கழகத்தை விளக்கேற்றித் திறந்துவைத்தார்.

### வருடாந்தக் கூட்டம்

வலிகாமம் வடக்குத் தமிழாசிரியர் சங்க வருடாந்தக் கூட்டம் மல்லாகம் ஆங்கில வித்தியாசாலையில் பண்டிதர் திரு வே. சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

### வதிரியில் சுதந்தர தினம்

வதிரியில் இந்திய சுதந்திர தினம் திரு எஸ். வீரசிங்கம் தலைமையில் நடைபெற்றது. மகாத்மா காந்தி அடிகளின் உருவப்படம் வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய மண்டபத்திலிருந்து மாவடி மைதானத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

### நாரம்பிட்டியில் சுதந்தர தினம்

நாரம்பிட்டி ராப்சே கார்டனில் இந்திய சுதந்திர தினம் அங்குள்ள மக்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திரு ஆர் ஜானகிராம் கொடியேற்றி வைத்தார்.

### ஆசிரியர் யூனியன்

தோட்டப் பாடசாலை ஆசிரியர் யூனியன் கேகாலை கிளையின் பொதுக் கூட்டமொன்று உந்துகொடையில் தலைவர் திரு எஸ். ஏ. ... நடைபெற்றது புதிய சம்பளத் திட்டமொன்றை தயாரித்து கல்வி மந்திரியிடம் சமர்ப்பிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

### ஆதியர் மறுமலர்ச்சி ஐக்கிய சங்கம்

இராமநாதபுரம் மாவட்டம் திருவடானைத் தாலுகா ஆதியர் மறுமலர்ச்சி ஐக்கிய சங்கம் இலங்கை கிளையின் பொதுக் கூட்டமொன்று திரு கே. பாலையா தலைமையில் நடைபெற்றது பொரண்டி என்னும் கிராமத்தில் திரு சுப்ரமணியம் என்பவரைச் ஜாதி இந்துக்கள் படுகொலை செய்துவிட்டதாகக் கூறப்படும் சம்பவத்தைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேறியது

### கொழும்பு தி. மு. கழகம்

கொழும்பு திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழு கூட்டமொன்று ஆட்டுப்பட்டித் தெரு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் திரு ஏ ஆர் மணி தலைமையில் நடைபெற்றது புதிதாக அமைக்கப்பட்டுள்ள இலங்கை திராவிட முன்னேற்ற மத்திய கழகத்துடன் இணைந்து பணியாற்றுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

### நேரு இளைஞர் சங்கத்தில் சுதந்தர தினம்

வடக்கன் குளம் நேரு இளைஞர் சங்கத்தின் சார்பாக 17-8-52 ல் திரு ராஜாராம் தலைமையில் இந்திய சுதந்திர தினப் பொதுக் கூட்டம் கூடப்பெற்றது. "சுதந்திரம்" எனும் பொருள்பற்றி திருவாளர்கள் தாஸ், தாசன முதலியோர் பேசினர்கள்.

### உழவு வேலைக்கு யானைகள்!

லக்ஷ்மணபுரி—

உத்திரப் பிரதேசத்தின் காடுகள் ஓரமாக உள்ள கிராமங்களில் உணவுப் பயிர்களை அழித்து நாசம் செய்யும் முரட்டு யானைகளை பிடித்துப் பழக்கி ஏர் கட்டி உழ உ. பி. சர்க்கார் ஒரு திட்டம் தயாரித்திருக்கிறது. கெட்டுப்போன டிராக்டர்களை இழுத்துச் செல்லவும் அவை பயன்படுத்தப்படும் ஒரு யானை 5ப குதிரை சக்திகொண்ட யந்திரத்திற்குச் சமமாம்!

### அர்ச் சல்லோறன்சியார் திருநாள்

நெடுந்தீவு மேற்கு கடற்கரையோரமாயுள்ள மேற்படி அர்ச் சல்லோறன்சியார் திருநாள் வழக்கம்போல இவ்வருடமும் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் இருந்து வந்த ரோமன் கத்தோலிக்க சைவ சமய மக்களிடையே ... நடைபெற்றது. பிரசாத பூசை நடைபெற்றது.


ஒளியிற் சிறந்தது சூரிய பிரகாசம் பீடியிற் சிறந்தது கமலா பீடியே ★

கமலா, லீலா பீடிகளும், பீடிக்குத் தேவையான நாகப்பூர், சிங்கறணி இலைகளும், ஆக்கூழ் நிற்பாணிபுகை யிலைகளும் சகாயமான விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்

வி. பி. அவசியம்கவனிக்கப்படும்.

கமலா ஸ்டோர்ஸ்

Proprietor S. V. பொன்னம்பலம்

15, செட்டியார் தெரு, கொழும்பு.


போன்: 3597 தந்தி: தாமரை



ரெஜிஸ்ரேட் நம்பர் 13207.

இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் கமலா பப்படத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒருமுறை பாவித்துப் பாருங்கள்!




உணவே மனிதனுக்கு ஊக்கம் உண்டாக்குவது!!

அந்த உணவை ருசிப் படுத்துவது


கமலா பப்படம்

முதல்ரக உழுந்தால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது. மணம், குணம், ருசியுள்ளது.

மொத்த வியாபாரிகளுக்கு சலுகை உண்டு

Proprietor: பி. எம். ஹமீது,

197, கெய்ஸர் வீதி, கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்தான ஆறாவது வாரம்



தர்ம தேவதா



மைலன் 29-ம் திகதி வெள்ளிக்கிழமை முதல்

ஞாயிறு, திங்கள்கிழமை 4 காட்சிகள் காலை 10, பிற்பகல் 2-30 மாலை 6, இரவு 9-30 மணிக்கு

# கல்யாணி

கிங்ஸ்லி [கொழும்பு] வெம்பிளி [கண்டி] வெல்லிங்டன் [திரிகோணமலை]

சனி 30ம் திகதி பகல் 2 மணி மாலை 6 மணி இரவு 9-30 மணி ஞாயிறு 31ம் திகதி காலை 10 மணி 2 மணி 6 மணி 9-30 மணி
திங்கள் 1ம் திகதி (ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு) காலை 10 மணி பகல் 2 மணி மாலை 6 மணி 9-30 மணி

# தர்ம தேவதா

அக்ரமமும், அகந்தையும் சேர்ந்து ஆர்ப்பாட்டம் செய்த உஜ்ஜயினி சாம்ராஜ்யத்தின் ரசமான வரலாறு

நடிகர்கள்:
லிங்கமூர்த்தி
முக்கமாலா
ரேலங்கி
பந்துலு

★

நடிகைகள்:
லலிதா
பத்மினி
பி. சாந்தகுமாரி
பேபி சரஸ்வதி

காமினி திரையில் உயர்தர ஹிந்தி சித்திரம்

# மா

லீலா சிட்னிஸ், பாரத்துஷன், ஷியாமா நடிப்பது.

ஞாயிறு, திங்கள் 1ம் திகதி நான்கு காட்சிகள் காலை 10-15 பிற்பகல் 3-15 மாலை 6-30 இரவு 9-30 மணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு, தட்டாதெரு, 196ம் இலக்க இல்லத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் ஸிலோன் நியூஸ் பேப்பர் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பில் 194 ஏ, தட்டாதெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1952 ஆகஸ்ட் 31ந் திகதி பிரசுரம் செய்யப்பட்டது.